குமரகுருபரன்



மலர் 16]   1965ஆ ஆவணி 1-ம் உ (17-8-65)   [இதழ்
தனிப் பிரதி 13 நயா பைசா

உள்ளுறை

பக்கம்

உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை



மலர் 16 | விசுவாவசு-௵ ஆவணித் திங்கள் 1-ம்௳ [17-8-65] | இதழ் 8

தில்லைச் சிவகாமியம்மை யிரட்டைமணிமாலை

(கட்டுரை 15)

தொண்டைமண்டலாதீனம் மகாசந்நிதானம்

சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அவர்கள்

ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் மடாலயம்,

காஞ்சிபுரம்.

'சிறைசெய்த தூநீர்த் திருத்தில்லைத் தொல்லை
மறைசெய்த ஈர்ந்தண் மழலைப் — பிறைசெய்த
ஒண்ணுதலைக் கண்ணுதலோ டுள்ளத் திருத்தியின்பம்
நண்ணுதலைக் கண்ணுதலே நன்று.' (13)

1. 'சிறைசெய்த தூநீர்த் திருத்தில்லை' என்றது தில்லையின் நீர்வளச் சிறப்புணர்த்திற்று.

2. 'தொல்லை மறை' என்றது வேதங்களின் அநாதியைக் குறித்தது.

3. 'மறை செய்த ஈர்ந்தண் மழலை யொண்ணுதல்' என்றது சிவசத்தியின் படைப்பு வேதம் என்னும் வாய்மையை விளம்பிற்று.

4. 'பிறைசெய்த ஒண்ணுதல்' என்றது நுதலுக்கு ஒப்பு (வெண்) பிறை என்றதாம்.

5. 'கண்ணுதல்' என்றது ஒண்ணுதல் போல்வதோர் அன் மொழித் தொகையாயினும் இரண்டற்கும் வேறுபாடுண்டு. ஒள் + நுதல். கண் + நுதல். ஒள்ளிதாகிய நுதலாள். கண்ணதாகிய நுதலான். ஒண்மை:– பண்பு. கண் உறுப்பு. நுதலிற் கண்ணை யுடையவன். நுதலின் ஒண்மை யுடையாள். முன்னது பண்புத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித் தொகை. கண்ணுதல் என்றது இரண்டன் ருெகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித் தொகை. தொகைப் புறத்துப் பிறந்த எனல் குற்றம் ஒருதொகைப் புறத்து மற்ருெரு தொகை பிறவாது. நிலைக்களத்துப் பிறந்த எனலே செவ்விது.

6. 'ஒண்ணுதலைக் கண்ணுதலோடு உள்ளத்திருத்தி' என்றது சிவத்யாநம் பண்ணும் விதியைத் தெரிவித்தவாறு.

7. 'இன்பம் நண்ணுதல்' என்றது அச் சிவத்யாந பலன் கூறிற்று.

8. 'நண்ணுதலைக் கண்ணுதலே நன்று' அப்பயனைக் கருதுவதே அடைதற்கு முன்னர்ச் செய்யற்பாலது என்றறிவித்தவாறு.

9. 'கண்ணுதலே நன்று' என்றது மனம், வாக்கு, காயம் மூன்றனுள்ளும் மனத்தின் வினையை (க் கண்ணுதலை) முன்னர்ச் செய்தால் வாக்கின் வினையாயப் போற்றிப் புகழ்தலும், காயத்தின் வினையாகிய அப்பயனைப் பெறுதல் முதலியவும் அரியன அல்ல. மிக எளிய என்றபடி.

10. 'நன்று பெரிதாகும்' என்னுந் தொல்காப்பியச் சூத்திரப் படி, ஏனை வாக்குக் காயங்களின் வினையைக் காட்டிலும் மனத்தின் வினையாகிய கண்ணுதலே பெரிது என்றவாறு.

இதில் உள்ள பொருள் இரண்டு, ஒன்று மறைகளை அருளியது. மற்றொன்று சிவத்யாநம் பண்ணுவோர் சிவபிரானைச் சிவசத்தியுடன் கூடிய நிலையில் வைத்துத் தியாநம் பண்ணுதல் வேண்டும் என்பது. முன்னதைக் குறித்துப் பல பல நூல்களிற் பல பல வகையில் உணர்த்தியிருக்கின்றனர் முன்னோர். பின்னதைக் குறித்தும் அவ்வாறே உணர்த்தியிருப்பினும் விளங்கிக் கொள்வது அரிதாயிருக்கின்றமையால், தியாநம் பண்ணும் நேயர்க்குச் செவ்விதின் அமைவதில்லை. அதை மட்டும் ஒரு சிறிது இதில் விளக்க விருப்பம் உண்டு.

'அவனருளாலே அவன் தாள் வணங்கி' என்றவாறு சிவத் தியாநம் செய்வோர் சிவத்தைச் சத்தியுடன் தியாநம் செய்யத் தக்க இடங்களில் வைத்துத் தியாநம் பண்ணிவருதல் பயன் தரும். உடலினுள் 'மனம்' எனச் சொல்லப்படுவது ஒன்றுண்டு. அது தத்துவம் முப்பத்தாறனுள் மண் முதலாக எண்ணப் படுங்கால் இருபத்தொன்றாவதாம். – நாதம் முதலாக எண்ணப் படுங்கால் பதினைந்தாவதாம். அதில் அச்சிவம் + சக்தி இரண்டனையும் ஒருங்குற வைத்துத் தியாநம் பண்ணுவதே சாதாரணக்கிரமம் ஆகும். சிறப்பாகச் செய்யுந் தியாநக்கிரமம் பலவேறு வகைப்படும். ஆருதாரங்களுள் ஒவ்வொன்றிலும் வைத்து வழிபடும் நிலையில், புருவ நடுவில் ஈரிதழ்த்தா மரையில் இருக்கும் வண்ணம் சதாசிவத்யாநம் செய்வதும் சிறப்புடையது, பிராசாதயோக மார்க்கத்தில், பிராசாத மந்திர ஜபக்ரமத்தில், சிவமந்திரத்தைச் சிவபேதம் சக்திபேதம் அறிந்து அதனதன் எல்லையைத் திறம்பட வுணர்ந்து ஜபம் புரியும் நெறியில் தியாநம் பண்ணும் முறைமை மிக்க சிறப்புடையது. ஆருதாரத்தையுங் கடந்து நிராதார மாகத் தியாநம் பண்ணுவது அதனினும் மிகச் சிறந்தது. ஆதாரம் நிராதாரம் இரண்டனையும் கடந்து அவற்றின்மேல் நிலை (மீதானம்; மிசை நிலம், 'நிலமிசை')யில் தியாநம் பண்ணுவது முடிவானது. ஆண்டும் சக்தியை விட்டுத் தியாநம் பண்ணுதலில்லை, பஞ்சாக்கரத்தில் சிவத்தை யுணர்த்து

வது சிகாரம். சக்தியை உணர்த்துவது வகாரம். உயிரை யுணர்த்துவது யிகாரம். நகாரம் மகாரம் இரண்டும் பாசம் (மலம் மாயை திரோதானம் கன்மம்). 'நம' இரண்டும் விட்டு ஜபம் செய்வதும், 'ய' கரத்தை விட்டு ஜபம் செய்வதும் அததற் குரிய பக்குவர் செயல். 'சிவ' என்னும் இரண்டனையும் மாறி ஜபம் பண்ணுவது சிவஞானிகள் இயல்பு. அதனைத் திருமுறை களும் மெய்கண்ட நூல்களும் நன்கு உணர்த்துகின்றன. 'வசி யாற்றமாமதியும் ஆம்' (திருமுறை 3, 306, 2) கலந்தருள் பெற்றது மாவசியே காழியரனடி மாவசியே' (3. 371. 10). 'மாறி விதிப்படி யோதஞ் செழுத்துமே' (உண்மை விளக்கம் 44) சிவஞான போதம் ஒன்பதாவது சூத்திரத்தின் அந்தரியாகம் உணர்த்துமிடத்திற் கூறிய வற்றையும் இங்கு நோக்குக.

சரியாவான்கள், கிரியாவான்கள், யோகிகள், ஞானிகள் ஆகிய நால்வர்க்கும் சிவநிலையும், சக்தி நிலையும் (அருபம், ரூபாருபம், ரூபம் என்னும் உருவநிலையும் அம்மூன்றனையும் கடந்த ஞான நிலையும் ஆக) வேறுபடும். வேறுபட்டாலும் சக்தியை விட்டுச் சிவத்தைமட்டும் ஜபம் செய்வதில்லை. தியா நம் பண்ணுவதும் இல்லை. யோகரும் ஞானியரும் சக்தியைக் கடந்து சிவத்தை யுற்றுச் சிவமாயே நிற்கும் நிலையுண்டு. அதனைச் சுவானுபவத்தால் அன்றி யுணர முடியாது. 'தாயை மறந்து ஏயுமதே நிட்டை' என்றது அதனையே. துகளறு போதம், சிவாநந்த போதம், சிவாநந்த போதசாரம் முதலிய உண்மை நூல்களில் அந்நிலை இனிதுணர்த்தப்பட்டுள்ளன. துகளறு போதத்திலே, 'அறிவடையச் சென்று அங்கு அதீதமாய் நின்ற குறி இறந்திட்டு ஒன்றுங் குறியா நெறி' என்று குறிக்கப் பட்டது அதுவே யாகும். சரியா வான்களும் கிரியா வான்களும யோகியருள் அபக்குவரும் சக்தியுடன் சிவத்தைத் தியாநம் பண்ணுதலே சிறந்த சாதனம். சிவப்பிரகாசர் இத்திறத்தில் ஒரு நல்ல கருத்தை வெளியிட்டார். அதை யெல்லாரும் உளத்திற் கொண்டு பயனடைவார்களாக.

“கண்புனல்துளிப்ப அழற்படும் இழுதின்
　　கரைந்துகும் நெஞ்சில்நின் றனையே
பெண்பயில் உருவமொடு நினைந்து எனது
　　பேணமயல் அகற்றும்நாள் உளதோ

வண்புனல் வேந்தன் ஆர்கலிக் குடத்து
மணிமுகிற் கலயத்தின் முகந்து
தண்புனல் ஆட்ட ஆடுறுஞ் சோண
சயிலனே கயிலைநா யகனே"

இதிற் பெண்ணுசை தீர்தற்பொருட்டுச் சிவத்தைச் சத்தியுடன் தியாநம் செய்க என்ற துணர்க. ஒண்ணுதலைக் கண்ணுதலோடு கண்ணுதல் நன்று. இன்பம் நண்ணுதலைக் கண்ணுதல் நன்று.

(தொடரும்)

இராகம் : ஆஹிரி தாளம் : ஆதி

பல்லவி

முருகனை மறவாதே — என்றும்
திருவடிது ணையுண்டு தேவாதிதேவனும் (முருகனை)

அனுபல்லவி

கருணவிலாசனும் கந்தன் புகழ்பாடு
தருணம் கிடைத்தபோது தரணியில் ஓதிடு (முருகனை)

சரணங்கள்

1) செந்தி லம்பதியினில் சிறந்து விளங்கிடும்
கந்தன் க்ருபாகரன் கதிர்வடி வேலவன்
விந்தைபல புரியும் வேத நாயகன்தனை
சிந்தையி லிருத்திடு சேவடி தொழுதிடு (முருகனை)

2) விந்தைபல காட்டி உலகம் உய்திடவே
சொந்தமுடன் வள்ளி தெய்வானை சமேதராய்
பந்தவினை அகல பாரில் அருள்புரிய
வந்தெ மக்கருள்தர வடிவேலுடன் விளங்கும் (முருகனை)

வி. கே. முத்தையா பிள்ளை, பி. ஏ., பி. எல்.
வண்ணார்பேட்டை, திருநெல்வேலி-3.

திருமந்திரம் TIRUMANTIRAM

ஐந்தாம் தந்திரம் Tantra the Fifth

டாக்டர், திரு. பா. நடராசன் அவர்கள் M. A., D. Litt.,
Member, Legislative Assembly,
MADRAS-31.

மலர் 16. இதழ் 7-ன் தொடர்ச்சி

The Path of Filial Piety, through yoga, leadeth to Gnana

கிரியாபாதம் யோக பாதவழியாக இறுதியில் ஞானநெறியில் உய்க்கின்றது

77. மேவிய சற்புத்திர மார்க்க மெய்த்தொழில்
தாவிப்பதாம்; சகமார்க்கம், சகத்தொழில்
ஆவதிரண்டும் அகன்று, சகமார்க்கத்
தேவியோ டொன்றல் சன்மார்க்கத் தெளிவதே.

The Path of Filial Piety is the foundation of Kriya [true;
Transcending both yoga and Kriya Paths
To merge in Sakti's Grace that yoga confers
Is the finite consummation of the Path Sanmarga.

சற்புத்திர மார்க்கம் எனப்படுவது கிரியை நெறியில் சொல்லப்படும் தெய்வ கருமங்களை நிலைநாட்டலாகும். யோகநெறி நிற்போர் அருட்சத்தியைக் காணப்பெறுகின்றனர். கிரியை, யோகம் ஆகிய இரண்டு நெறிகளையும் கடந்து, அருட்சத்தியோடு இரண்டறக் கலத்தலே சன்மார்க்கமென்னும் ஞானநெறியின் முடிந்த முடிபாகும்.

குறிப்பு: வரி 1 சற்புத்திர மார்க்கம்; கிரியை. (இதுவே சகத்தொழில் என்றும் கூறப்பட்டது)

வரி 2: சகமார்க்கம்; யோகம்
வரி 4: சன்மார்க்கம்: ஞானம்.

What Constitute the Kriya Path or the Path of Filial Piety

சற்புத்திர மார்க்கம் என்னும் கிரியை நெறியில் செய்ய வேண்டுவன

78. பூசித்தல், வாசித்தல், போற்றல், செபித்திடல்
ஆசற்ற நற்றவம், வாய்மை, அழுக்கின்மை,
நேசித்திட்டு அன்னமும் நீசுத்திசெய்தல், மற்று
ஆசற்ற சற்புத்திர மார்க்க மாகுமே.

To perform Pujas, to read the scriptures holy
To praise the Lord, to chant His holy name,
To practise tapas, to be truthful,
To bear no envy,
Thyself to cook the offering for the Lord with [loving care
– These and other acts of reverence
Constituteth the pure path of Filial Piety.

இறைவனை நறுமலரால் அர்ச்சனை செய்து பூசை செய்தல், வேதாகம நூற்களைப் படித்தல், தோத்திரம் செய்தல், மந்திரம் செபித்தல், தவவிரதங்களை மேற்கொள்ளல், வாய்மை கடைப் பிடித்தல், அழுக்காறு கொள்ளாதிருத்தல், அன்போடு தானே இறைவனுக்கு நிவேதனம் சமைத்துப் படைத்தல்-ஆகிய கிரியை கள் அனைத்தும் தூய சற்புத்திர மார்க்கத்தின் பாற்படும் நற் செயல்களாகும்.

குறிப்புரை: கீழ்வரும் சிவஞான சித்தியார் பாடல் ஒப்புநோக்குக:-

புத்திரமார்க்கம் புகலிற் புதியவிரைப்போது
புகையொளி மஞ்சனமமுது முதல்கொண்டைந்து
சுத்தி செய்தாசனமூர்த்தி மூர்த்தி மானுஞ்
சோதியையும் பாவித்து ஆவாகித்துச்சுத்த

பத்தியினுலருச்சித்துப் பரவிப் போற்றிப்
பரிவினெடும் எரியில் வருகாரியமும்பண்ணி
நித்தலும் இக்கிரியை யினை இயற்றுவோர்கள்
நின்மலன்றன் அருகிருப்பர் நினையுங்காலே.
—சுபக்கம்-சாதனவியல். சூத் 8 அதி. 2-செய் 20.

All Nature Worshipethwith flowers; why not thee?

இயற்கை அனைத்துமே மலரிட்டு அருச்சனை செய்கின்றது, நீ செய்யாத தேனோ?

79. அறுகாற் பறவை அலர் தேர்ந்து உழலும்;
மறுகா நரைஅன்னம் தாமரை நீலம்
குறுகா நறுமலர் கொய்வன கண்டும்,
சிறுகால் அறநெறி சேரகி லாரே

The humming bees roam unceasing from flower
to flower;
The Snow-white swans amidst the lotus and the
blue-bells;
They all, all, seek the flowers fragrant;
Yet, thou have beheld all this;
Adore not the Lord, even for a while.

வண்டு மலர்களை நாடிப் பறந்து திரிகின்றது; அன்னம் தாமரை, நீலோற்பலம் ஆகிய மலர்களை நாடிக்கொய்கின்றது. இங்ஙனமாக உயிரினங்களெல்லாம் ஓயாது மலர் கொய்து நிற்க, ஆறறிவு படைத்த மனிதர்கள் பூவெடுத்து இறைவனைச் சிறுபொழுதேனும் வழிபடாதிருக்கின்றனரே!

The Lord is our Defence and Refuge

இறைவனே நமது காவலும் தஞ்சமும்

80. அருங்கரை யாவது அவ்வடி நீழல்;
பெருங்கரை யாவது பிஞ்ஞுகன் ஆணை
வருங்கரை ஏகின்ற மன்னுயிர்க் கெல்லாம்
ஒருங்கரை யாய்,உல கேழின் ஒத்தானே

His Holy Feet are our rock of Refuge;
His commandments, our defences battlements;
He is verily the finite Shore
For the surging tide of lives on earth;
He pervades thus, the seven worlds alike.

இறைவன் திருவடி நிழலே உயிர்களுக்குப் புகலிடமாய் அமைகின்றது; அவன் திருவாணையே அவர்களது காவல் அரணுக உள்ளது; மண்ணுலகில் தோன்றும் மன்னுயிர்க்கெல்லாம் அவனே பிறவிப் பெருங்கடலின் கரையாக அமைகின்ருன். ஏழுலகிலும் அவன் அவ்வாறே படர்ந்துள்ளான்.

குறிப்புரை வரி 1 கரை – தஞ்சம்
வரி 2 கரை – அரண்
வரி 3 கரை – உலகு
வரி 4 கரை – கடல் எல்லை.

Adore the Lord in diverse ways; He Shall be thine, then

இறைவன்பால் எவ்வகையானும் அன்பு செலுத்துமின்; பிறவிப்பயனைப் பெறுவீர்

81. உயர்ந்தும், பணிந்தும், முகந்தும், தழுவி
வியந்தும், அரனடிக் கேமுறை செய்மின்;
பயந்தும், பிறவிப் பயனது வாகும்;
பயந்து பரிக்கில், அப்பான்மைய ஞமே

Rise high, bend low, Kiss and embrace the Lord;
Praise Him, sing Him and pray at His holy Feet;
That shall thine birth's fulfilment be;
In trembling love thou do adore Him;
He, indeed, shall be beloved unto thee.

நின்றும், கிடந்தும், முத்தமிட்டும், தழுவியும், போற்றியும், புகழ்ந்தும், இறைவன் திருவடிக்கே வணக்கம் செய்யுங்கள்; அதுவே ஊனெடுத்த உடம்பின் பயனுகும்; அச்சம் கலந்த அன்பொடு பத்தி செய்வார்க்கு அவனும் அவ்வண்ணமே அன்பாயிருக்கிருன்.

Approach the Lord through the Kriya Path, He shall reveal Himself unto thee

கிரியா பூசையில் இறைவனை நாடுமின்; அவன் உங்களுக்கு வெளிப்படுவான்

82. நின்று தொழுவன் கிடந்தெம் பிரான்தன்னை,
என்றும் தொழுவன் எழிற்பரஞ் சோதியைத்
துன்று மலர் தூவித்தொழுமின்; தொழுந்தோறும்
சென்று வெளிப்படும், தேவர் பிரானே

In reverence I stand and adore mine lord;
In humility I prostrate and praise Him;
And for ever and ever shall I worship the Divine Light of Beauty;
Thou too shall seek Him with flowers fragrant,
The more thou adore Him
The fuller He revealeth Himself unto thee
–He the Lord of all Beings Heavenly.

எனது தலைவனும் இறைவனை நின்று தொழுவேன்; கிடந்து தொழுவேன்; என்றும் தொழுவேன்; அவன் அழகொழுகும் தெய்வ ஒளியைக் காண்பேன். நீவிரும் அவனை மலர் பறித்து அருச்சித்துப் பூசை செய்யுமின்; செய்யச் செய்ய, அவனும் நும் முன்னே தோன்றுவான்; அவன் தேவர்களுக்கெல்லாம் தலைவன்.

(தொடரும்)

THE GLORY OF INDIAN WOMANHOOD

Mr. D. Ramaswamy Ayyangar,
Advocate, Madras.

In his classical Nalavenba நளவெண்பா Pugazhendi, one of the greatest among Tamil poets celebrates the rule of womanhood in the following verse:

நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா
ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா—வேற்படையும்
வாளுமே கண்ணு வதன மதிக் குடைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு.

பெண்மை is womanhood. It reigns supreme with all the insignia of royalty.

A four-fold army was the first requisite of a stable kingdom in those days. In Tamil literature every king worth the name was said to maintain, in the interests of defence mainly, four kinds of armies known respectively as கஜ, ரத, துரக, பதாதி, meaning Elephant-force, Chariot-force, Cavalry and Infantry. Womanhood, of which Damayanti was an ideal and a model, had this four-fold army. It consisted of the four essential qualities of womanhood—நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு— bashfulness, modesty, fear and disgust. These essentially feminine qualities were the forces that protected womanhood. That was the poet's grand conception. Even if any one of these four was found lacking in a woman, to that extent femininity is deficient and defective.

Bashfulness consists in discreetly keeping oneself away from public gaze. We can remind ourselves of

---

Reproduced from Diomond Jubilee Souvenir of Sri Somasundara Kanya Vidyalaya, Kancheepuram with kind permission.

Sita Devi's reaction when she was made to get down from the palanquin and walk in front of all the denizens of Lanka and the assembled warriors of Kishkinda.

Madam or மடமை does not mean ignorance: it connotes modesty which conceals knowledge and feigns ignorance After delivering a most beautiful sermon to sri Rama about விநா, வைரம் ரௌத்ரதா (anger and fury without just cause), suddenly Sita Devi pulls herself up and most sweetly winds up by saying

"ஸ்த்ரீ சாபலாதே ததுதா ஹ்ருதம்மே
தர்மம் சவக்தும் தவ கஸ்ஸமர்த்த."

This is மடமை the very opposite of the present day eeling in certain circles that woman must outwit man openly in all matters.

The third quality stressed by our forefathers is fear-not cowardice by any means, but a legitimate feeling of fear born out of the softness. always associated with that sex. Here too, Sita Devi can be looked up to furnish an apt illustration. Sita Devi, who fearlessly accosts Ravana, expresses to Hanuman her fear and trepidation about her being safely carried by him on his back as he desired to :

"அஹமாகாசமாபந்நாஹ்யுபர்யுபரி ஸாகரம்|
ப்ரபதேயம் ஹிரேப்ருஷ்டாத் பயாத்வே கேந்கச்சத"||

The fourth and last trait of a woman is பயிர்ப்பு. It can best be translated as the sense of revulsion and disgust that is engendered in a woman at the thought or touch of a பரபுருஷன் any man except her husband. Utter indifference to men in general is not the outcome of hatred but the result of a superior sense of chastity. With the best of intentions, Hanuman offers to

carry Sita back to Rama across the seas. One prime reason why Sita rejects the idea is 'how can I touch any male except my Lord and Lover' Kamban puts it beautifully when he makes that paragon of all feminine virtues—Sita Devi—exclaim "ஏறு சேவகன் மேனியல்லால் இடை, ஆறும் ஐம்பொறி நின்னையும் ஆணெனக் கூறும் இவ்வுருத் தீண்டுதல் கூடுமோ." I know that you are a 'jitendriya', one who has completely quelled and conquered the senses. Yet in the eye of the world you are a man. How can I contemplate contact with this your form? Hanuman simply gets lost at this expression of sentiment by Sita Devi and bursts out "காஹ்யந்யாத்வாம் ரிதே தேவி! ப்ரூயாத் வசன மீத்ருசம்?" "who but you can talk thus",-forgetting even the rebuff that Sita had administered to him.

It is good for a woman to come forward to prove her capacity and mettle against man. But in the process let her not unsex herself by shedding the aforesaid four qualities which really define and depict womanhood. Let us leave it to Lady Macbeth and her ilk to pray for being unsexed.

Even as an army is indispensable to a kingdom, rightminded ministers are also very essential for enabling the King or Queen to properly rule the country. The good and capable ministers of womanhood are that lady's gnanendriyas (ஞானேந்திரியங்கள்) seeing, hearing, smelling, tasting and touching — கண், செவி, மூக்கு, நாக்கு, உடல். Each one of these five senses has to be properly trained and then looked up to for advice and guidance. Without proper training they are likely to give wrong advice and mislead the ruler. They must be நல்லமைச்சு or good and safe ministers. Disciplined indriyas are an asset to any one even as

unbridled indriyas are a source of danger. It is so for men too, but in the case of woman it is much more so for obvious reasons.

The third idea in the verse is that the jingling anklet is the trumpet that heralds the arrival of the royalty that is womanhood. சிலம்புதல் in Tamil means ஒலித்தல், creating sound. Though one can think of several ornaments of children which are so made as to produce noise at the slightest movements, in an adult female the jewel worn at the ankle is peculiarly made to produce noise at every movement of the foot. Hence it derives the name சிலம்பு. It is known as Noopura (நூபுரம்) in Sanskrit. This was the one jewel of Sita Devi that Lakshmana was able to identify as he had seen it every time he prostrated before Her. The Tamil poet equates it with the trumpets and drums that are sounded to herald the arrival of royalty, another important regal emblem.

Jewellery for women is not for publicity or even for beutification; but is a symbol of auspiciousness. There are certain jewels worn by Indian woman from time immemorial which are indicative of Saubhagyam (auspicious wealth). It is to be regretted that a tendency to appear in public without such ornaments is increasingly noticed in the married women of today. Renouncing ornaments is a bad trait. To secure the Kingdom of Ayodhya for her son Kaikeyi threw away her ornaments-insignia of her saubhagya-and very soon thereafter she had to don the widows's weeds. Sita Devi was obliged in her distress to remove certain ornaments and throw them over to Sugreeva and his followers when she was forcibly carried by Ravana. Kamban with his consummate art makes Hanuman

point out how even such an ostensibly improper act became productive of great good to Her. "அன்று நீ இழித்து நீத்த மற்றை நல்லணிகள் காண் உன் மங்கலம் காத்த" Those jewels which you threw away have really protected your மாங்கல்யம். Rama, when He was shown those jewels, identified them as His Consort's and from then He shook off His despondency and determined to live and rescue Her from the Rakshasa. That is how those jewels kept Rama alive and Sita's மாங்கல்யம் safe. Such a noble place is given to jewels in Tamiland. I entreat the womenfold of today to bear this truth in mind and not to denude themselves of jewels even when they can afford them. Jewels are not for show but for Saubhagya.

Pugazhendi then describes the eye and refers to it as வேற்படை and வாள் spear and sword. Spear is indicative of sharp insight, and sword of bright outlook. Eye is the organ of sight and helps one to look. Royalty must have a sharp and piercing insight into men and things. At the same time it must have a broad and bright outlook. Spear with its sharp point capable of piercing through things is suggestive of the former, and the sabre with its broad blade and a shining surface is indicative of the latter. Womenfolk by nature are endowed with deep insight. The most unlettered woman has still an uncanny intuitive faculty. Her untutored heart can read situations and understand their import quickly. So too a woman's tender heart is always soft and sympathetic and her sympathy will normally embrace all mankind. Her outlook is thus praiseworthy as it is bereft of narrowness and insularity. This twin function–insight and outlook–really glorifies womanhood.

Royalty has ever been associated, in this land of poets and philosophers, with a broad and white umbrella வெண்குடை. King Dasaratha says to his subjects in the beginning of Ayodhyakanda about his having ruled over his Kingdom under a white umbrella for thousands of years. Kausalya Devi when she is expecting to see Rama as a crowned prince sees Him coming without a white umbrella. கொற்ற வெண்குடையுமின்றி and gets afraid. So intimate is the connection between royalty and a வெண்குடை. What is the குடை under which womanhood rules? The answer is வதன மதிக் குடை-the moonlike effulgence of a woman's face which spreads itself out like a broad umbrella. மதி is the moon signifying white, as well as cool, effulgence. A woman's face is reputed to be her greatest wealth.

Such is the glory of Indian Womanhood as pictured by a very great poet. India's glory is really the glory of her women who are the repositories of Dharma.

Let us all therefore pay our homage, thankfulness and gratitude to those who have been responsible for the starting and the maintenance of an institution for the education of girls like the Sri Somasundara Kanya Vidyalaya, Kancheepuram, whose Diamond jubilee is being celebrated now, and to those who will have the pleasure and privilege of looking after it in the years to come.

திருக் கோவையார் விளக்கம்

பேராசிரியர் பாலூர் :
திரு. கண்ணப்ப முதலியார் அவர்கள்.

அணியும் அமிழ்தும்என் ஆவியும் ஆயவன் தில்லைச் சிந்தா
மணியும் பரார்அறி யாமறை யோன் அடி வாழ்த்தலரில்
பிணியும் அதற்கு மருந்தும் பிறழப்பிறழ மின்னும்
பணியும் புரைமருங் குல்பெருந் தோளி படைக்கண்களே.

இதன் பொருள் மின்னல் கொடியும் பாம்பும் போலும் இடையுடையவளும், பெரிய தோளுடையவளும், ஆன தலைவியின் வேல் படை போலும் கண்கள்: ஆபரணமும் தேவாமிர்தமும் என உயிரும் ஆனவளுமாக இருப்பவளும் தில்லையில் தேவ லோக ‘சிந்தாமணியுமாய், இருந்தும் தேவர்களால் அறியப் படாதவனும் வேதவேதியனும் ஆய் உள்ளவனுக இறைவனுடைய திருவடிகளைப் போற்ருதவர்களைப்போல நோய் தருவன வாயும், பின் அவைகளே அந்நோயைத் தீர்க்கும் தேவாமுத மாகவும் இருக்கின்றன என்பது.

அருஞ்சொற்கள்: அணி-ஆபரணம், ஆவி-உயிர், உம்பரார்-தேவர்கள். மறையோன்-வேதவடிவினன் வாழ்த்தலரில்-வாழ்த தாதவர்களைப் போல. பிணி-நோய், பணி-பாம்பு, புரை-போலும், மருங்குல்-இடை-புடை-வேல்.

இங்கு இடைக்கு மின்னலும், பாம்பும் உவமை கூறப்படு கின்றன.

வள்ளலார் மலர் – 2. இதழ் 6, 7-ல் வந்துள்ளதை அனுமதியுடன் பிரசுரிக்கப்பெற்றது.

இடை நுண்ணிதாக இருத்தலின் சிலபோது தோன்றுதலும் சில போது காணுதற்கு அரிதாக இருத்தலின் மின்னல் உவமை பொருத்தமே. மின்னலும் தோன்றி மறைகின்றதன்றே, பாம்பு உவமை எங்ஙனம் பொருந்தும் என்பது என் சிற்றறிவிற்கு எட்டவில்லை. மேலும் நான் அறிந்த வரையில் பாம்பை இடைக்கு உவமை தந்த புலவர்களைக் கண்டிலன். மணிவாசகம் பெருமானின் புதிய படிப்பு என்பது எனது கருத்து. பாம்பு உவமை இடை வளைதலினுல் போலும். கண்ணின் கூரிய பார்வைக்கு வேல் படை உவமை தக்கதே. இறைவன் வேண்டுவோர் வேண்டுவன ஈபவன். ஆகவே சிந்தாமணி இறைவனுக்கு உவமை ஆயிற்று. சிந்தாமணி இந்திரன் உலகில் உள்ள ஒருகல். இது இருக்கப்பெறின் வேண்டியதை வேண்டியவாறு பெறலாம். இறைவன் திருவடிகளை வணங்கப்பெறுபவர்களே நோயினின்று நீங்கப்பெறுபவர். இதனை அப்பர் மருந்தாய் பிணி தீர்க்க வல்ல அடி என்றும்; எங்கள் பிணி தவிர்த்து வழுவா மருந்தும் ஆவன அழுவார்க்கு அமுதங்கள் காண்க. ஐயாறன் அடித் தலமே என்று கூறுதல் காண்க.

மாதர்கள் காதல் குறிப்பிற்கு இணங்காமல் பார்க்கின்ற பார்வை பின்பு நோய் செய்ய வல்லன, பின்காதற்கு இணங்கிப் பார்க்கும் நோக்கு அந்நோயைத் தீர்க்கும் மருந்தாய் அமையும். இதனைத் திருவள்ளுவர் - அழகுற

இருநோக்கு இவள்உண்கண் உள்ளது ஒருநோக்கு
நோய்நோக்கு ஒன்று அந்நோய் மருந்து

என்று உணர்த்தியுள்ளார்.

கம்பரும் இக்குறிப்பை நன்கு "நஞ்சினும் கொடிய நாட்டம் அமுதென நயந்து நோக்கி" என்பர். திருவாவடுதுறை கோவையும் செம்மையுற, தென்னு வடுதுறைச் செம்பொன் தியாகர் செழுங்கிரிமேல் அந்நாள் அமரர்க்குப் பொன் முன்னர் அடுத்ததொரு கொன்னுர் விடம் தந்து பின்னர் அமுதம் கொடுத்த இந்த தீந்த மின்னுர் கடலில் இரண்டு மோர் காலை விளங்கியவே" என்கிறது.

இக்கருத்துக்களே இங்கும் பிணியும் அதற்கு மருந்தும் என்று கூறப்பட்டுள்ளது.

அமுது சுவையும் தரும். உண்டார்க்கு உடல் உறுதி, மன உறுதியும் தரும். இது போல இறைவனும் ஆன்மாவுக்குச் சுவையும் உறுதியும் தருதலின் அமுது எனப்பட்டான். உயிரினும் மக்களுக்குச் சிறந்த பொருள் இன்மையின் அவ்வு யிரையே இறைவஞகக் கருதினுன் தலைவன். ஆகவே ஆவி என்ருன். தலைவன் தலைவியின் கருத்தைக் கண்களின் மூலம் உணர்ந்தான். கண்கள் உடன் பாட்டுக் குறிப்பை உணர்த்த வல்லன என்பதைத் தொல்காப்பியம் என்னும் நம் பழம் பெரும் இலக்கண நூல்.

‘நாட்டம் இரண்டும் அறிவுடம்படுத்தற்குக்
கூட்டி உரைக்கும் குறிப்புரை ஆகும்’

என்று கூறுகிறது.

ஆருவது செய்யுள் "தெய்வத்தை மகிழ்தல்" என்னும் தலைப்பின் கீழ் அமைந்தது. அதாவது, தலைவியின் காதல் குறிப்பை உட்கொண்டு உணர்ந்து இத்தகைய அரிய இப்பெண் எனக்குக் காட்டிய தெய்வத்தை மகிழ்ந்து போற்றுகின்றேன்" என்பதாம். இதனைக்கொளு.

அன்னமென்னடை அரிவையைத் தந்த மன்னிரு தெய் வத்தை மகிழ்ந்துரைத்தது என்கிறது. இதன் பொருள் "அன்னம் போலும் மென்மையான நடையுடைய மாதின் கொடுத்த நிலைபெற்ற,பெரிய தெய்வத்தைக் குறித்து மகிழ்ந்தது என்பதாம். (அரிவை-பெண், மன் — நிலை பெற்ற இருந்தெய் வப் — பெரிய தெய்வம்.)

இக்கருத்தை அறிவிக்கும் செய்யுள்,

வளைபயில் கீழ்கடல் நின்றிட
மேல்கடல் வால்நுகத்தின்
துளைவழி நேர்கழி கோத்தெனத்
தில்லைத் தொல்லோன் கயிலைக்

கிளைவயின் நீக்கிஇக் கெண்டையம்
கண்ணியைக் கொண்டு தந்த
விளைவைஅல் லால்விய வேன்நய
வேன்தெய்வம் மிக்கனவே

என்பது.

இதன் பொருள் சங்குகள் வாழ்கின்ற கீழ்த்திசைக் கடலிலே நின்று இட்ட, கழி மேற்குத் திசையின் கடலில் இட்ட, பெரிய நுகத்தடியின் துளையில் சென்று கோத்துக்கொண்டது போல, தில்லையினிடத்துப் பழையோனாகிய இறைவன் வீற்றிருக்கும் கைலையில் இருந்த தோழியர் கூட்டத்திலிருந்து நீக்கி, கெண்டையைப் போன்ற கண்களையுடைய இம்மாதினைக் கொண்டு வந்து தந்த நல்வினையின் விளைவாகிய தெய்வத்தை அல்லது மிக கனவாகிய தெய்வங்களை வியக்கமாட்டேன். விரும்பவும் மாட்டேன் என்பது.

அருஞ்சொற்கள்: வளை - சங்குகள், நுகம் - நுகத்தடி, கிளை - தோழியர்களாகிய உறவினர், வயின் - இடம் கண்ணி - கண்ணையுடைய தலைவி. விளைவு-நல்வினையின் விளைவான தெய்வம், நயவேன் - விரும்பமாட்டேன்.

தலைவனும் தலைவியும் முன்பின் அறியாதவர்கள். இவர்களே அறியாத போது இவர்களின் பெற்றோர்களை எப்படி அறிய முடியும்? இந்நிலையில் இருந்த ஒரு தலைவன், தலைவியைக் கூடியபோது அவளை நோக்கி "ஆயும் ஞாயும் யார் ஆகியரோ எந்தையும நுந்தையும் எம்முறைக்கேளீர், யானும் நீயும எவ்வழி அரிதும், செம்புலப் பெயல் நீர்போல அன்புடை நெஞ்சம்தாம் கலந்தனவே" என்று வியந்து கூறினான். இது குறுந்தொகை என்னும் நூலில் கண்டது. திருக்கோவையர் செய்யுளும் எங்கோ இருந்த தலைவனும் எங்கோ இருந்த தலைவியும் ஒன்று கூடியதற்கோர் அருமையான உவமை கூறுகிறது. அதாவது மாட்டின் கழுத்தில் இடும் நுகத்தடி நமக்குத் தெரியும். அந்நுகத்தில் துளைகள் இருப்பதையும் நாம் அறிவோம். அத்துளையில் நீண்ட இரு கழிகள் நுழைக்கப் படுவதையும் அறிவோம். நுகத்தடியில் கழியைக் கோப்பது நம்முடைய செயல்

அப்படிக்கின்றிக் கீழ்க்கடலில் இட்ட கழி மேற்கடலில் இட்ட நுகத்தடியின் துளேயில் தானுகச் சென்று நுழைந்தால் இஃது ஓர் அதிசயச் செயலாகும். இது போலவே எங்கோ இருந்த தலேவி எனக்குக் கொண்டு வந்து நல்வினேத் தெய்வம் தந்தது என்று வியந்து பாராட்டினுன். தெய்வம் ஈண்டு நல்வினே யாகிய தெய்வம். இறைவன் உறைவிடம் கயிலேயும் ஆதலின் ஈண்டு அதனேயும் இணேந்துப் பேசினர்.

எல்லாம் செய்ய வல்லது ஊழ் (விதி) ஆதலின் பிற தெய் வங்களேயான் வியவேன். வினேயையே (ஊழாகிய தெய்வத் தையே) வியப்பேன் நயப்பேன் என்று தலேவன் கூறினுன். இதன் கருத்து இத்தகைய அரிய மாதின் எளிதில் எனக்குக் கொண்டு வந்த நல்வினேயாகிய தெய்வத்தை வியக்கின்றேன்; நயக்கின்றேன் என்பது.

தலேவனுக்கு வியப்பு ஏற்படக் காரணம், பல தோழியர்கள் தன்னுடன் இருக்கவும், அவர்களே யாவரையும் விட்டு நீங்கித் தனியே அவள் தன்முன் வந்து நின்றதனுல் என்க. இதனேயே கிளேவயின் நீக்கி தலேவி தனியே வருதற்குத் துணேயாக இருந் தது நல்வினேயாதலின், தன் வினேயால் நீங்கி என்று கூருது, நீக்கி என்று கூறினுன்.

தலேவி தலேவனேப் பிறழப் பிறழப் பார்த்ததனுல் கெண்டைக் கண்ணி எனப்பட்டாள். கெண்டை பிறழும் தனிமையது அன்ருே. இறைவன் ஒருவனே பழமையானவன். காரணம் இவனுக்குமுன் எவரேனும் இருந்தால்தானே! இதனே நன்கு திருவாசகத்தில் "முன்னேப் பழம் பொருட்கும் முன்னேப் பழம், பொருளே" என்றும் "பழையோன் காண்க பரமனே காண்க", என்றும், திருநாவுக்கரசர் வாக்கில் 'முளேத்தானே எல்லார்க்கும் முன்னரே தோன்றி' என்றும் விளக்குதல் காண்க.

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலர் 16, இதழ் 7-ன் தொடர்ச்சி]

II

THIRUNAVUKKARASU SWAMI

(More commonly referred to as APPARSWAMI)

59. பண்ணினேர் மொழியாளுமை பங்கரோ
மண்ணினார் வலஞ்செய் மறைக்காடரோ
கண்ணினா லுமைக்காணக் கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்ம்மினே.

One whole hymn, from which our next verse is taken, is a prayer for the opening of a door. Tradition has it that the great locked temple door at Vedaranyam swung open in answer to this song.

59. Uma is Thy portion, whose words are like song.
In fair Maraikkadu men circle round Thee
In worship. O graciously open this door
That we Thy true servants Thy glory may see.

(தொடரும்)

Reproduced with the kind permission of Oxford University Press, Calcutta.

(N.B. Copies available for sale at the above Press.)

உருத்திரனும் சிவனும்

வித்துவான், திரு. கி. பிச்சுமணி அவர்கள், பி. ஓ. எல்.,

"நற்றமிழ் நாட்டிலிருந்துதான் சைவ மதம் உலகெங்கணும் பரவிற்று" என்பதை மேனாட்டுத் தத்துவப் பேராசிரியர்கள் போலும் ஒப்புக் கொண்டுள்ளனர். அவ்வாறிருக்க, உத்தரப்பிரதேஷிலுள்ள சில ஆராய்ச்சியாளர்கள் "காசிதான் சைவமதத்திற்குப் பிறப்பிடம்" எனப் பிரசாரம் செய்வது எவ்வாறு பொருந்துமென்று என்சிற்றறிவுக்குப் புலப்படவில்லை.

வேதத்தில் போலும் 'உருத்திரர்களை'ப் பற்றிய வர்ணனையே காணப்படுகிறது. உபநிஷத்துக்களிலும் நாராயணனைப் பற்றியோ, உருத்திரனைப்பற்றியோ வர்ணனைகள் காணப்படுகின்றன. புருஷ ஸூக்கத்தில் 'சிவ' என்ற சப்தம் வந்துள்ளது. ஆனால் புருஷஸூக்தம் பிற்காலத்தில் தான் எழுதப்பட்டதெனப் பல அறிஞர்கள் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். ஏனெனில் நால்வகை சாதிகளைப் பற்றிய வர்ணனை அதில் விவரமாக இருக்கிறது. முற்காலத்திய வேதவாக்கியங்களில் அவ்வாறு சாதிப் பாகுபாடு காணப்படவில்லை.

இனி 'உருத்திர' தேவதையைப் பற்றி ஆராய்ந்தால், ஆதித்யர்கள், வஸூக்கள் என்றபடி 'பதினோரு உருத்திரர்கள்' ஒரு சமுதாயத்தைச் சேர்ந்த தேவதைகள் என்பது புலனாகும். 'உருத்திரனும், சிவனும் ஒன்றல்ல' என்பதை சைவ சிந்தாந்தம் கற்றுணர்ந்து கேட்டுத் தெளிந்த அறிஞர்கள் கூறியிருக்கின்றனர்.

'சிவம்' என்ற சொல்லே தமிழ்ச் சொல்லாகும்; 'சிவம்' என்ற சொல் பாணிநியின் வியாகரணப்படி ஒரு 'தாது' வினடியாகப் பிறந்ததல்ல. 'சிவம்' என்பது செம்மையையும், செழுமையையும் குறிக்கும். மோனநிலை முற்று முணர்ந்தோரே, 'சிவத்'தையும் காணவல்லார். சிவத்தை நன்குணர்ந்தவர் எல்லா

வற்றையும் உணர்ந்தவராவர்; ஏனெனில், வாக்கும் பொருளும் போல, எள்ளும் எண்ணெயும் போல, நூலும் ஆடையும் போல, பொன்னும் மோதிரமும் போல சிவத்தில் உலகம் ஒடுங்கி, விரிந்து, அடங்கி நிற்கிறது. அந்த 'சிவத்'தைக் கண்டு பிடித்து உய்யும் வழிதேடியவன் தமிழன்; இல்லறத்திலும், துற வறத்திலும் ஒருங்கே 'சிவத்'திற்கு வழிபட்டு 'வீட்டைப்'பற்றி விரிவாக உணர்ந்தவன் தமிழன். வேத காலத்தில் ஆரியர்கள் 'சிவவழிபாடு' செய்து வந்தனர் என்பதற்கு ஆதாரமே கிடைக்க வில்லை. 'உருத்திரன்' – என்று அவர்களால் வழங்கப்படும் தேவதைக்கும் 'சிவம்'என நாம் வணங்கும் முழுமுதற் கடவுளுக் கும் எவ்வித சம்பந்தமுமில்லை. 'சிவம்' என்ற சொல்லிலே பிரமன், விட்டுணு, ருத்திரன், சக்தி நால்வருமே அடக்கம் என் பதை மந்திர சாஸ்திர முணர்ந்த பெரியோர்கள் ஒப்புக்கொண்டி ருக்கின்றனர்.

"சிவத்தை ஒருமுறை வழிபட்டவன் கூட வேறு தேவதை கள்பால் மனத்தைச் செலுத்துவதுமில்லை; செலுத்துவதும் முடி யாது". எத்தனை தேவதைகளை வழிபட்டாலும், சிவத்தை வழி படாத வரை நற்கதி பெறுவது மிக்க கடினமாகும். ஆகவே 'சிவனும் உருத்திரனும்' — வெவ்வேறு தேவதைகளென்பதும், சிவம் முழுமுதற்கடவுள் என்பதும் நன்கு புலனாகும்.

திருவண்டப் பகுதி

திரு. சா. ப. சபாரத்தினம், எம். ஏ., பி. எஸ். சி.,

மலர் 16. இதழ் 7-ன் தொடர்ச்சி

இன்பநிலை உணர்த்தல் :

இனி, அடிகளார் தம் இன்பநிலையை எவ்வாறு விளக்குகின்றார் என்பது அறிந்து மகிழற்பாற்று. அடிகளார் பெற்ற காட்சியின்பம், இவர் பாட்டைப் பாடும்போது பெற்றதன்று. என்றோ பெற்ற இன்பம். தில்லையிலன்றித் திருப்பெருந்துறையில் பெற்ற இன்பம். அவ்வின்ப அனுபவம் ஆண்டுகள் பலவாகியும் அவருள்ளத்தே தேக்குண்டு இன்னறும் பொய்கையாய் அலைமோதிக் கொண்டிருக்கின்றது. அவ்வலைகளின் தாக்குதலால் தில்லையில் இருந்தவண்ணம் தம் இன்பநிலையைப் பாடுகின்றார். அடிகளார் இப்பகுதியில் இன்பத்தைப் புலப்படுத்து மாற்றிற்கும், ஏனைய திருச்சதகம், முதலான பகுதிகளில் இன்பத்தை வெளிப்படுத்து மாற்றிற்கும் வேறுபாடு இருக்கின்றது.

"சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன்திரள்தோள்
கூடுவேன் கூடிமுயங்கி மயங்கி நின்று
ஊடுவேன் செவ்வாவ்க் குருகுவேன் உள்ளுருகித்
தேடுவேன் தேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்தும் மலர்வேன் அனலேந்தி
ஆடுவான் சேவடியே பாடுதுங்காண் அம்மானாய்"

என்னும் திருவம்மானைப் பாட்டில் அடிகளார்தம் இன்பம் வெளிப்படுகின்றது.

"ஊன்வந்து ரோமங்கள் உள்ளே உயிர்ப்பெய்து
தேன்வந்து அமுதின் தெளிவின் ஒளிவந்த
வான்வந்த வார்கழல். (திருவம்மானை)

என்றும்,

"ஞானக்கரும்பின் தெளிவைப் பாகை
நாடற்கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்க வல்ல
கோனை............ (திருப்பொற்சுண்ணம்)

என்றும் வருவனவெல்லாம் இன்பவெளியீட்டுக் கிளவிக் குழு எனக் கொள்க. அடிகளார்தம் இன்பக்கிளர்ச்சியான் எழுந்தனவே திருவெம்பாவை, திருவம்மானை, திருப்பொற்சுண்ணம் திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருப்பொன்னூசல் முதலிய பகுதிகள் எனக்கூறின் மிகையன்று. இப்பகுதிகளிற் கிளர்ந்தெழும்பும் இன்பம் தெளிவுடன் திகழ்தர, திருவண்டப் பகுதியின் இன்ப உணர்ச்சியோ தெளிவற்றுப் பொங்குகின்றது. அடிகளாரின் தடுமாற்றம் இப்பகுதியில் நன்கு புலனாகின்றது. அம்மையப்பராய்த் தனக்கருளிய காட்சியை ஈண்டு நினைவு படுத்திக் கொள்கின்றார், அடிகளார்.

"குவளைக் கண்ணி கூறன் காண்க
அவளுந் தானும் உடனே காண்க.

என்று நினைவு கூர்ந்தபின் உள்ளத்தே அலைமோதிக் கொண்டிருக்கும் இன்பம் மேலிடுகின்றது. அவ்வின்ப மேலீட்டான் இறைவனை ஒரு மேகமாக உருவகப்படுத்தி வாழ்த்துகின்றார். அகத்துறையாயினும் புறத்துறையாயினும் தண்ணளி புரிந்த தலைவனின் செயலை முகிலின் செயலோடு உவமித்துக் கூறவே, உள்ளம் விழைந்து நிற்கின்றது. அஃது உள்ளத்தின் இயற்கை போலும்! அடிகளார் பாடுகின்றார்;

"பரமானந்தப் பழங்கடல் அதுவே
கருமா முகிலின் தோன்றித்
திருவார் பெருந்துறை வரையில்ஏறி
... ...
... ...
....
அருச்சனை வயலுள் அன்புவித்திட்டுத்
தொண்ட உழவர் ஆரத்தந்த
அன்டத் தரும்பெறல் மேகன்வாழ்க" (66-95)

"இறைமேகம்" ஒன்று இவ்வடிகளைப் பயின்று துய்த்தவுடன் நம் அகக்கண்கட்குப் புலனாகின்றது; அம்மேகம் பொழியும் அருண் மழையில் நாமும் நனைகின்றோம். "மேலான இன்பப் பழங்கடலே கரிய பெரிய சூன்முகில் போல உருக்கொண்டுத் திருப்பெருந்துறையாம் வரையின் மேலேறுகின்றது; மிகப் பொலிவுடைய விந்தொளி மின்னொளிபோன்று திக்குகள் தோறும் பரவுகின்றது; அவ்வொளியான் ஐம்புல அவாவின் கட்டாகிய பாம்புகள் தலைசாய்க்கின்றன; பிறவித்துன்பமாம் வேனிற்காலம் தன்தலையை ஒளித்துக் கொள்கிறது; இறைவனின் அருள்திருக்கையாம் தோன்றிப்பூ ஒளி சிறந்து விளங்குகின்றது; எண்ணிறந்த பிறவிகளைப்போல் இந்திரகோபப் பூச்சிகள் மிகுதியாக ஊர்கின்றன; பேரருளின் முழக்கம் எங்கணும் கேட்கின்றது; அடியார் மேலே கூப்புங் கைகள் காந்தண் மலரைப் போல் தோற்றமளிக்கின்றன; இன்னருளாம் மழைத்துளிகள் எங்கெங்கும் சிதறுகின்றன; அத்துளிகள் திரண்டு வெள்ளமாகின்றன;வெள்ளம் மலையை மோதுகின்றது. திசையெங்கும் பாய்ந்து பெருகுகின்றது; அவ்வருள்வெள்ளப் பெருக்கில் உயிர்களை வருத்தும் துன்பக்குட்டங்கள் ஆழ்ந்து தஞ்செயலற்றுப் போகின்றன; விடாய்கொண்ட (அடியார்களாகிய) மான்கூட்டம் அறுவகைச் சமயங்களாம் பேய்த்தேரினைப் பருகியும் வேட்கை தணியாதுத் தளர்ச்சிகொண்டு வெம்மை மேலீட்டான் முன் வருந்திய வருத்தம் இது காலை நீங்குகின்றது; அவ்வருள்வெள்ளம் வானின்கண் உள்ள பெரிய யாற்றின் உள்ளிடத்திற் பாய்ந்து எழுச்சி பெறுகின்றது; இன்பமாகிய பெரிய சுழியினைச் சுழித்துச் செல்கிறது; அப்பேரின்பப் பெருக்கு 'பந்தம்' என்னுங் கட்டாகிய பெருங்கரையை முட்டி இடிக்கின்றது; முறைமுறையே உயர்ந்து தோன்றும் இருவினைகளாகிய பெரிய மரங்களை வேரொடு பறித்து எழுகின்றது; பண்டு யாற்றில் இருந்த அழகிய அருள் நீரை ஓட்டிச்செல்கின்றது; இயற்கையான வெள்ளப் பெருக்கு சந்தனமரங்களைக் குறுக்கே வீழ்த்துத் தானே தனக்கொரு தடையாக்கிக் கோடல் போல் இவ்வின்பப் பெருக்கும் அடியார் நினைவுகளை ஈர்த்து அவர்கள் உள்ளத்தளவிற் றடைப்படுகின்றது; மெய்யடியார் உள்ளங்களாகிய வாவிகளை வளைக்கின்றது; வண்டுகள் மொய்க்

கும் குளங்களின் மேல் அவ்வருள்நீரைக் கொண்டு வருகின்றது; அதனைத் தொண்டராகிய உழவர் தமது வழிபாடாகிய வயலுள் நிரப்பித் தம் பேரன்பாகிய வித்தினை அதன் கண் விதைத்து அதன் பயனுன சிவப்பேற்றினை நுகருகின்றனர். இங்ஙனம் அருண்மழை பொழியும், அருள்வெளியின்கண் பெறுதற்கரிய மேகம் போல்வான் வாழ்க'' என்பது உருவக அடிகளின் கருத்துப்பொருள்.

இயற்கையில் நிகழும் கார்கால நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்து அந்நிகழ்ச்சிகளோடு அன்புத்துறையில் நிகழும் நிகழல் களை ஒப்புமைப் படுத்திக் கூறும் அடிகளாரின் இயற்கை யுணர்வு பெரிதும் வியந்து பாராட்டற்குரியது. வேனிலொடுக்க மும், தோன்றிப் பூக்களின் செவ்வொளியும் இந்திர கோபங் களின் ஊரலும், தமிழ்ச்சுவை துய்த்தார் உள்ளங்களிலே சங்க இலக்கியத்திற் காணக்கிடக்கும் முல்லைத்திணைப் பாடல்களை எழுப்பிக் காட்டுகின்றன. இங்கே ஒப்புமை முழுமை அடைந்து ஒளிர்கின்றது. ஒரு நிகழ்ச்சியை யாயினும் அடிகளார் ஈண்டு உருவகப்படுத்தாமல் இல்லை. ஆயினும் காண்மின், சில நிகழ்ச்சிகள் முன்பின்னுகப் பிறழ்ந்து வந்துள்ளமையை? இந் நிகழ்ச்சிகளின் பிறழ்ச்சியே அடிகளாரின் தடுமாற்றத்தைப் புலப்படுக்க வல்லன.

“ திருத்தகு மின்னெளி திசைதிசை விரிய ”

என மின்னெளியைக் காட்டுவார், தொடர்ந்து இடியேற்றின் முழக்கத்தை ஒலித்திருக்கலாம் அன்றே! அதுதானே ஒழுங்கு! அடிகளார் அங்ஙனம் செய்யவில்லை காண்! மின்னெளியை அடுத்து,

“ ஐம்புலப் பந்தனை வாளரவு இரிய
வெந்துயர்க் கோடை மாத்தலை கரப்ப
நீடெழில் தோன்றி வாளொளி மிளிர
எந்தம் பிறவியிற் கோபம் மிகுத்து ”

என்றெல்லாம் கூறிய பின்னரே, மாப்பெருங் கருணையின் முழக் கத்தைக் குறிப்பிடுகின்ருர். இங்கே தடுமாற்றம், இவ்வாறே

"பூப்புரை அஞ்சலி காந்தள் காட்ட
எஞ்சா இன்னருள் நுண்துளி கொள்ள"

என்பதிலும், நிகழ்ச்சியின் பிறழ்ச்சியை நோக்குக. அருள் துளி களின் சிதறலை, முழக்கத்திற்கு அடுத்தாற் போல் கூறிக் காந்தட் காட்சியை இந்திரகோபக் காட்சியோடு சேர்த்திருக்க லாம். இங்கே தடுமாற்றம்.

"செஞ்சுடர்வெள்ளம் திசைதிசை தெவிட்ட, வரையுற"

என்பதிலும் அத்தடுமாற்றம் உள்ளது. இப்படித்தான் பாட வேண்டும் என்று அடிகளார் ஈண்டு வரம்பமைத்துக் கொண்டு பாடவில்லை. உணர்ச்சிப் பெருவரையின் நுனிமுகட்டில் இருப் பார்க்கு முறையாகப் பாடுதல் என்பது எளிமையன்று. சொற் களின் துணை அப் பேருணர்ச்சியின் வெளியீட்டிற்குப் போதவும் போதாது. புலவன் தடுமாறித்தான் ஆகவேண்டும். இங்கே அடிகளாரின் தடுமாற்றத்திற்குக் காரணங்கள் இரண்டு கூற லாம். ஒன்று அனுபவத்தின் பழமை; மற்றொன்று முடிவிலாப் பேரின்பத்தின் காரணமாக உள்ளம் அடையும் துள்ளல்நிலை. எனவே மேற்காட்டிய பகுதியில் தெளிவுக் குறைவோ, தடு மாற்றமோ இருத்தலைக் கொண்டுப் புலவர்தம் புலமையில் குறைகாண்டல் தீது; அஃது அறமும் அன்று. தெளிவுக் குறை இருந்தாலும் கலை முழுமை யடைந்து விடுகின்றது. புலவர் தாம் உணர்த்த விரும்பியதைக் குறைவின்றி உணர்த்திவிடடார். அதுதான் நாம் வேண்டுவது. உணர்ச்சிப் பெருவெள்ளத்தில் சிக்குண்டு சுழலும் புலவரின் உள்ள நிலையையே ஈண்டு நாம் உணர்ந்து போற்றுதல் வேண்டும்.

(தொடரும்)

சுந்தர மூர்த்தி சுவாமிகளின்

அற்புதத் திருப்பதிகங்கள்

Hymns of St. Sundarar

திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள், M. A.,
தமிழ் விரிவுரையாளர்,
காசி இந்துப்பல்கலைக்கழகம், காசி.

Then St. Sundarar visited Tiruvalangadu and Tiruvural and reached Kanchi. There at the Ekambaranath temple he appealed to Him once again to forgive him and restore his sight. The Lord was pleased and granted him his request. St. Sundarar's left eye got back its vision. In gratitude and joy there came out a padigam (decad of poems)

திருக்கச்சியேகம்பம் பண்: தக்கேசி

ஆலந்தான்உகந்து அமுதுசெய்தானை ஆதி யையம ரர்தொழு தேத்தும்
சீலந் தான்பெரி தும்முடை யானைச் சிந்திப் பாரவர் சிந்தையு ளானை
ஏல வார்குழ லாள்உமை நங்கை என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
காலகாலனைக் கம்பனெம் மானைக் காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.

"I regained my vision to look at my Lord, the Great Kamban, who is the killer of the god of death and who is worshipped for ever by Elavar Kuzhali (Parvathi); He is that who took the poison with pleasure, who is the Source (of everything), whom the Celestials worship, who is the embodiment of purity, and who lives in the minds of those who think of Him always."

(To be continued)

பூவும் சிகையும்

மதுரை, ஸ்ரீ பாலசுவாமிநாதசிவம் என்ற
டாக்டர், பாலசுவாமி அவர்கள், L. M. P. (A)

மக்கள் பூக்களை உபயோகிக்க ஆரம்பித்த காலத்திலிருந்தே அதனதன் குணங்களையும் சிதையில் சூடுவதால் ஏற்படும் நன்மை தீமையையுமறிந்துணர்ந்தே சிகையில் அலங்கரிக்கத் தகுந்தவை தகாதவை என்று பூக்களைப் பிரித்துள்ளார்கள். பெண்களின் மனம் எப்பொழுதும் குளுமையாகவும் சந்தோஷமாகவும் இருக்க வேண்டும் என்று கருதி தீங்கற்ற நறுமணமுள்ள மலர்களையே அணிய வேண்டும் என்று பெரியோர்கள் வற்புறுத்தியுள்ளார்கள்.

கண்ணைக் கவரும் பல வண்ணங்கள் கொண்ட மலர்கள் யாவும் சிகை அலங்காரத்திற்குப் பொருந்துமெனக்கருத முடியாது. சில மலர்கள் நற்குணமுடையவை; சில துர்க்குணமுள்ளவை; சில விஷமுள்ளவை. நாகரிகத்தின் பெயரால் கண்ணுக்கு அழகாகத் தெரியும் தீங்குள்ள மலர்களை சிகையில் வைத்துக் கொள்வதால், சிரரோகம், கண்ரோகம் முடிவுதிரல், தலைக்கனம், ஜலதோஷம், தலைவலி, போன்ற வியாதிகள் நம்மையறியாமலே ஏற்படுகின்றன. இது முன்னோர்களின் அநுபவம். உதாரணமாக, சிலவகைப் பூக்களை முகர்ந்தவுடன் தலைக்கனம், தலை கிறுகிறுப்பு மயக்கம், தலைவலி இவைகள் ஏற்படும். அரளி, கனகாம்பரம் முதலிய சில விஷத்தன்மையுள்ள மலர்களை அறியாமல் குழந்தைகள் தின்றுவிட்டால், பிராண அபாயம் நேரிடுகின்றன. ஆகவே நற்குணமுள்ள மலர்களே சிகை அலங்காரத்திற்குத் தகுந்தவை. ஆரோக்கியத்திற்கும்

இக்கட்டுரை "ஞானகுரு" என்னும் இதழிலிருந்து ஆசிரியர் அனுமதியுடன் பிரசுரிக்கப்படுகிறது.

உற்சாகத்திற்கும் கூட உகந்தவை. தலையின் பின் பக்கத்தில் பிடரியின் மேல் பாகத்தில் மலர்களை அணிந்து கொள்ளும் இடமாகிய சிகையின் உள்பாகம் எத்தகையது என்பதைச் சற்று ஆராய்வோம்.

எண்சாணுடம்புக்குச் சிரசே பிரதானம். மூளையின் அடிப்பாகமாகிய சிறு மூளையும் முள்ளந்தண்டுக் கொடியும் பிணைக்கப்பட்ட இந்த இடமே உடலின் முக்கிய வேலைகள் நடைபெறும் பிரதான கேந்திரம், சுவாசித்தல், இரத்த ஓட்டம், நரம்பியக்கம் முதலியவை நடை பெறுகின்ற கேந்திர ஸ்தலமாகிய இந்த இடம் மஞ்ஞானமுகம் எனப்படும்.(Medulla oblongatta)இதை அனுசரித்தே, பிரதானமாய் மலர்களை அதன் பக்கத்தில் அணிந்து கொள்வது பொருத்தமானதென நிர்ணயித்தார்கள் பெரியோர்கள். இக்காலத்தில், நாகரீகத்தின் பெயரால் மலர்கள் அணியுமிடம் நகர்ந்து கொண்டே போகின்றது. நாம் அணிந்து கொள்ளும் மலர்களின் குணங்களை கேந்திர ஸ்தானம் எளிதில் கிரகித்துத் தக்க பலன் நமக்கு அளிக்கிறது. முகர்ந்தால் மனதுக்குப்பிடிக்காத வாசனையுடைய மலர்களும் பார்வைக்கு மட்டும் அழகானவையும் வாசனையற்றவையும் தீங்கிழைப்பவையுமான மலர்களும் நீக்கப்பட வேண்டும். நற்குணமுடைய பூக்களாகிய ரோஜா, மல்லி, முல்லை, செண்பகம், மகிழம், மந்தாரை, பவளமல்லி, திருநீற்றுப் பச்சை, கொழுந்து, மருவம், பிச்சி, இருவாச்சி முதலிய குளுமையும் நறுமணமுமுள்ள மலர்களையே உபயோகிக்க வேண்டும். அழகினை மட்டும் கருத்திற் கொள்ளாது, குணத்தினையும் மனத்திற் கொண்டு தேர்ந்தெடுத்த புஷ்பங்களால் அலங்கரித்துக் கொண்டால். பெண்கள் மனோரம்மியமாய் இருப்பதுடன் ஆரோக்கிய வனிதைகளாகவும் காட்சியளிப்பார்கள் என்பது முக்காலும் திண்ணம்.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்

இலங்கை அரசாங்கத்தின் நில, மின்சார, நீர்ப்பாசான அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி

திரு. ம. ஸ்ரீகாந்தர் அவர்கள்

17–5–65-ல் இலங்கை வானொலியில் ஒலிபரப்பிய பேச்சு,

சென்ற ஆண்டில் எனது குடும்பத்துடன் கந்தசட்டி விரதத்தை அனுட்டிக்கும் நோக்கத்துடன், தென்னாட்டில் பழைமையும் பெருமையும் வாய்ந்த முருகப்பெருமான் ஸ்தலமாகிய திருச்செந்தூருக்குச் சென்றிருந்தேன். யாத்திரையை முடித்து இலங்கை திரும்புமுன்னர், சைவசமயத்தையும் தமிழ் மொழியையும் தமது இரு கண்மணிகளைப் போலப் பாதுகாத்து வளர்த்து வரும் சைவாதீனங்கள் ஒன்றிரண்டையாவது பார்க்க வேண்டுமென்று பேரவா என்மனத்தில் இருந்தது. திருச்செந்திலின் பெருமையை அறியாத சைவசமயத்தை சேர்ந்தவரோ, தமிழறிஞரோ இருக்கமாட்டார்களென்றே கூறலாம்.

“ வந்தவினையும் வருகின்ற வல்வினையும்
கந்தனென்று சொல்லக் கலங்கிடுமே—செந்திநகர்ச்
சேவகா என்று திருநீறு அணிவார்க்கு
மேவ வாராதே வினை”

திருச்செந்தூரின் பெருமை சங்க இலக்கியங்களிலும், சிலப்பதிகாரத்திலும், தேவாரத்திலும் கூறப்பட்டிருக்கின்றது. ஆயினும் கந்தபுராணத்தை ஓதினவர்களுக்கும், ஓதக்கேட்டவர்களுக்கும், திருச்செந்திலைக் காணவேண்டுமென்ற மனக்காதல்

இலங்கை ஒலிப்பரப்பு பகுதியினரின் அனுமதிபெற்று பிரசுரிக்கப்படுகிறது.

உள்ளூறிக்கொண்டேயிருக்கும். எங்கள் குருநாதராகிய கொழும் புத்துறை ஸ்ரீலோக சுவாமிகளின் திருக்குறிப்பின்படி, கொழும்பி லுள்ள சைவ அன்பர்கள் ஒன்று சேர்ந்து வெள்ளவத்தையிலுள்ள விநாயகர் ஆலயத்தில் கந்தபுராணத்தை 1963-ம் ஆண்டு ஐப்பசி மாதம் முதல் 1964-ம் ஆண்டு பங்குனி உத்தரதினம் வரை தொடர்ந்து வாசித்துப் பொருள் கூறினார்கள், கந்தபுராண படனத்தைத் தொடர்ந்து கேட்ட எமக்கு, செந்திலாண்டவனைக் கந்தசட்டி காலத்தில் தரிசிக்க வேண்டுமென்ற பேரவா உதித் தது. வேண்டுவார் வேண்டுவதே ஈயும் கருணையங்கடலாகிய செந்திலாண்டவன் திருவருளினால், எமக்குச் சென்ற ஆண்டில் நடந்த கந்தசட்டிகாலத்தில் திருச்செந்தூருக்குச் சென்று சண்முகப் பெருமானை வழிபடும்பேறு கிடைத்தது.

யாம் செந்திலாண்டவன் கோயிலை வலம் வரும்போது, அங்குள்ள சுட்டளைகுருக்கள், கோயிலின் கிழக்கு வாசலிலுள்ள சுவரில் செந்திலாண்டவன் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகளுக்கு அருள் புரிந்த காட்சி ஓவியமாக வரைந்திருப்பதை எமக்குச் சுட்டிக் காட்டினார். இத்தெய்வக்காட்சி எனக்கு குமரகுருபர அடிகளைப் பற்றியும், அவர் அருளிச்செய்த பிரபந்தங்களையும் மேனமேலும் ஆராய்ந்து உணரவேண்டுமென்ற எண்ணத்தை உணர்த்தியது.

அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றைப்பற்றிப் பலர் நன் கறிந்திருந்த போதிலும், அவர் வாழ்க்கையில் நிகழ்ந்த சில சிறப்பான அம்சங்களை இங்கே கூறுதல் பொருத்தமாயிருக்கு மென்று கருதுகின்றேன்.

குமரகுருபர சுவாமிகள், திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள ஸ்ரீவைகுண்டம் என்னும் கிராமத்தில் ஏறக்குறைய 350 ஆண்டு களுக்கு முன்னர் தமிழ் நாடு செய்த தவத்தின் பயனாய் அவ தரித்தவர். சண்முகசிகாமணிக்கவிராயர் அவர் தந்தையாரின் பெயராகும். தாயார், சிவகாமியம்மை. இவர்களுக்கு நெடுங் காலம் பிள்ளைகளில்லாமையால் தங்கள் குலதெய்வமாகிய செந்திலாண்டவனை வேண்டி அருந்தவங் கிடந்தனர். அதன் பயனாக இவர் தோன்றினார். ஆனால் 5 வயது வரும்வரையும்,

இவர் பேசாதிருப்பதைக் கண்ட பெற்ரோர்கள் பெரிதும் கவலை யடைந்தார்கள். பின்னர் இவர்கள் இந்தப் பிள்ளையைத் திருச் செந்தூருக்கு எடுத்துச்சென்று சண்முகப்பெருமான் திருமுன்னர் வைத்து, நாற்பது நாட்களுள் இப்பிள்ளை பேசுந்திறமையைப் பெருவிடில், உயிர் துறப்போம் என்று சங்கற்பம் செய்தார்கள். நாற்பதாவது நாளும் வந்தது. பிள்ளை பேசவில்லை. பெற்ரோர்கள் தங்கள் தீர்மானத்தை நிறைவேற்ற முயன்ருர்கள். அப்பொழுது கருணையங்கடலாகிய செந்தில் முருகன் திருவருளால் குமர குருபரர் தமது பெற்ரோரை "அம்மே, அப்பா" என்றழைத்தார். பெற்ரோர்கள் மகிழ்ச்சிக் கடலிலாழ்ந்தார்கள். செந்தில் பெருமான் மீது குமரகுருபரர் "கந்தர் கலிவெண்பா" என்ற தோத்திர நூலை அருளிச்செய்தார். அதன்பின்னர் அவர் மதுரைக்குச் சென்று அங்கயற்கண்ணம்மையையும் சோமசுந்த ரப் பெருமானையும் வணங்கினுர். அப்போது மதுரையை ஆண்ட திருமலைநாயக்க மன்னனின் வேண்டுகோளின்படி மீனுட்சி யம்மை பிள்ளைத் தமிழையும் திருக்குறளிலுள்ள பொருளைச் சுருக்கி, நீதிநெறிவிளக்கம் என்ற நீதி நூலையும் அருளிச் செய்தார்.

மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழின் அரங்கேற்றம் திருமலை நாயக்க மன்னனின் முன்னிலையில் நடந்தது. "தொடுக்குங் கடவுட் பழம்பாடற் றொடையின் பயனே நறைபழுத்த துறைத் தீந்தமிழினொழுகு நறுஞ்சுவையே!" என்ற பாடலை அரங்கேற் றும் போது ஸ்ரீ மீனுட்சியம்மையே ஒரு பெண் குழந்தை வடிவில் தோன்றி அரசருடைய முத்துமாலையைக் கழற்றி குமரகுருபர ருக்கு மகிழ்ச்சி மேலீட்டால் அணிந்தார் என்று கூறுப.

பின்னர் குமரகுருபரர், மதுரையினின்றும் நீங்கி, திருவாரு ருக்குச் சென்று அங்கே கோயில் கொண்டருளியிருக்கும் தியாகராசப் பெருமான் மீது "திருவாரூர் நான்மணிமாலை" என்ற நூலைப் பாடினுர். குமரகுருபரர், சிவஞான உபதேசத்தைப் பெறவேண்டுமென்ற நோக்குடன், தருமபுரத்திற்குச் சென்று அங்கே நான்காம் பட்டத்திலெழுந்தருளியிருந்த ஸ்ரீ மாசிலா மணிதேசிகரின் திருவடிகளை வணங்கி உபதேசம் செய்யுமாறு வேண்டினுர்.

அப்பொழுது மாசிலாமணி தேசிகர், அவரைக் காசி யாத்திரை செய்துவரும்படி பணித்தார். காசி யாத்திரை நெடுங் காலமெடுக்குமென்று குமரகுருபரர் ஏங்கிநின்றபோது சிதம்பர யாத்திரை யேனும் செய்து வரும்படி தேசிகர் கட்டளையிட்டார். குமரகுருபர அடிகள் சிதம்பரத்திற்குச் செல்லும் வழியில் வைத்தீஸ்வரன் கோயிலில் தங்கி, "முத்துக்குமாரசாமிப் பிள்ளைத் தமிழ்" என்ற பிரபந்தத்தை அங்கே கோயில் கொண்டருளி யிருக்கும் செல்வமுத்துக் குமாரசாமி மீது அருளிச்செய்த பின், சிதம்பரத்திற்குச் சென்றார். அங்கே ஸ்ரீ நடராசப்பெருமான் மீது, "சிதம்பர மும்மணிக்கோவை" பாடினார். பின்னர் தரும புரத்தை யடைந்து தமது தேசிகரிடம் ஞானோபதேசமும் சந்நி யாசமும் வாங்கிக்கொண்டார். தேசிகரின் ஆசிபெற்றுக் காசிக்குச் சென்று, "சகல கலாவல்லி மாலை" என்ற தோத்திரத் தைப் பாடி கலைமகள் அருளால் இந்துஸ்தானி மொழி கைவரப் பெற்றார். காசியிலிருந்த மகமதிய மன்னன் இவருடைய தவக் கோலத்தையும் அருட்பாலவையும் கண்டு வியந்து கங்கைக் கரையிலுள்ள கேதார கட்டத்தில் ஒரு மடம் அமைப்பதற்கு ஒரு நிலமும் பொருளும் உதவினான். அங்கே அவர் ஸ்தாபித்த மடம் குமாரசாமி மடம் என்ற பெயரால் இன்றும் நின்று நிலவுகின்றது.

குமரகுருபரர் மீண்டுமொருமுறை தருமபுரம் வந்து தமது குருநாதனை தரிசித்தபின் காசிக்குச் சென்று, விசுவநாதப் பெருமான் மீது "காசிக் கலம்பகம்" என்ற பிரபந்தத்தை அருளிச்செய்தார். இற்றைக்குச் சரியாக 277 ஆண்டுகளுக்கு முன்னர் காசி விசுவேசரின் திருவடி நிழலை எய்தினார். காசியி லுள்ள குமாரசாமி மடமும், திருப்பனந்தாளிலுள்ள ஸ்ரீ காசி மடமும், இவராலும், இவர் வழிவந்த ஸ்ரீ தில்லைநாயக சுவாமி களாலும்நிறுவப் பெற்றவை. நாளையதினம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளுடைய குருபூசை. காசியிலுள்ள குமாரசாமி மடத்தி லும், திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்திலும், ஸ்ரீவைகுண்டத்திலும், மதுரையிலும், இன்னும் பல்வேறிடங்களிலும் சிறப்பாகக் கொண் டாடப்படும்.

குமரகுருபரரின் தீந்தமிழினெழுகு நறுஞ்சுவையை மாந்து பவர்கள் மற்றொன்றையும் நினைக்கமுடியாத நிலையிலிருப்

பார்கள். கந்தர்கலிவெண்பாவும், முத்துக்குமாரசாமிப் பிள்ளைத் தமிழும் பாராயண நூல்களாக வழங்குகின்றன. அவற்றை பக்தியோடு பலர் பாராயணம் செய்து விரும்பியவற்றையும், முருகன் திருவருளையும் பெற்று வருகின்றனர்.

கந்தர்கலிவெண்பாவில் இவர் முருகப்பெருமானை நோக்கி, "சுவாமி, அடியேனுக்கு நல்ல காப்பியப் புலமையையும் ஐந்தி லக்கண அறிவையும், பழுத்த தமிழ்ப்புலமையையும், நல்லொழுக் கத்தையும், மும்மலநீக்கத்தையும், அடியார்கள் கூட்டுறவையும், இறுதியில் திருவடிப் பேரின்பத்தையும் தந்தருளும்" என்று வேண்டுகின்றார்.

பிள்ளைத்தமிழென்ற வளவிலே தமிழ் பயில்வார் யாவர்க்கும் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் முதலில் நினைவுக்கு வரும்.

மீனாட்சி பிள்ளைத் தமிழில் அவர் அம்பிகையைத் "துறைத் தீந்தமிழினொழுகு நறுஞ்சுவையே" என்று அம்பிகைக்கும் தமிழுக்குமுள்ள தொடர்பை இனிமையாக எடுத்துரைத்தலை நாமும் படித்து இன்புறலாம்.

"நீதிநெறி விளக்கம்" – திருக்குறளின் பரப்பையெல்லாம் திரட்டித் தொகுத்துக் கூறும் திவ்வியமான நீதி நூலாகும். இதில் கல்வியின் பெருமையை –

"அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும்; — உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்கும் கல்வியின் ஊங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை".

என்ற செய்யுளால் புலப்படுத்துகின்றார். "கல்வியினூங் கில்லைச் சிற்றுயிர்க்குற்ற துணை", என்ற அடிகளை நாம் சதா சிந்தித்து அதன்படி ஒழுகவேண்டுமென்று சுவாமிகள் வலியுறுத்து கின்றார்கள். சகலகலாவல்லி மாலையைப்போல் இனிய, எளிய, நடையிலுள்ள சரசுவதிதோத்திரம் வேறு இன்மையின் அது மிகவும் சிறப்பாகப் போற்றப்பெற்று வருகின்றது. "சிதம்பர மும் மணிக்கோவை" இவருக்குள்ள இலக்கணப் புலமையைக்

காட்டுகின்றது. பண்டார மும்மணிக்கோவை, சுவாமிகளுக்கு தமது ஞான தேசிகர் மீதுள்ள பேரன்பையும் பக்தியையும் சைவ சித்தாந்தப் பற்றையும் விளக்கிக் கூறுகின்றது.

"ஒரும் வேதாந்தமென்றுச்சியிற் பழுத்த
ஆராவின்பப் வருங்கனி பிழிந்து
சாரங்கொண்ட சைவசித்தாந்தத்
தேனமுதருந்தினர் சிலரேயானவர்"

என்ற அடிகளால், இவர் சைவசித்தாந்தத்தைத் தேனென்று கூறுவ தோடமையாது, தேனமுது என்று நயம்பட இன்பம் பயக்கும் வகையில் கூறுவதை, சைவமக்களாகிய யாம் நன்ருகச் சிந்தித்தல்வேண்டும். இந்தத் தேனமுதை அருந்தினவர் ஒரு சிலர்தான் என்கின்ருர் குமரகுருபரர். பரம சைவசித்தாந்தி யாகிய குமர குருபரமுனிவர், வைத்தீஸ்வரன் கோவிலிலுள்ள செல்வ முத்துக்குமாரசாமியைப் பாடும்போது –

"மெய்கண்ட தெய்வ மித்தெய்வமல்லாற் புவியில்
வேறில்லை யென்றுணர்த்தியான்"

என்ற அடிகளால் முருகப்பெருமானின் பரத்துவத்தையும் திரு வருட்பெருக்கையும் விளக்குகின்ருர்.

டாக்டர் உ. வே. சாமிநாதயைரின் குருவாகிய மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்களை முன்னிலைக்குக் கொண்டுவந்த பெருமை திருவாவடுதுறை ஆதீனத்திற்கே யுரியது. இந்த மகாவித்துவான் குமரகுருபரர் சரித்திரத்தைச் செய்யுளாகப் பாடியிருக்கின்ருரென்ருல், குமரகுருபரரின் பெருமை எத்துணை பெருமை வாய்ந்ததென்பதை நாம் நன்கு உய்த்துணரலாம்.

குமரகுருபர முனிவர் தாம் வாழ்ந்த காலத்தில் சைவசம யத்தைக் குமரி முதல் இமயம்வரை பரப்பினுர். அந்தப்பணியை, ஸ்ரீ காசிமடத்தின் இருபதாம் தலைவராக வீற்றிருந்து அருளாட்சி செலுத்திவரும் ஸ்ரீலஸ்ரீ அருணந்தி தம்பிரான் சுவாமிகள் தொடர்ந்து செய்து வருகின்ருர்களென்பது உலகறிந்த விஷயமாகும். திரு வருளும், குருவருளும் கைகூட்ட, சென்ற திருக்கார்த்திகைத்

திருநாளன்று தவசிரேட்டராகிய இம்முனிவரைத் தரிசிக்கும் புண்ணியப்பேறு பெற்ருேம். இம்முனிபுங்கவரின் தவக் கோலத்தையும், கருணையுள்ளத்தையும், அன்பு ததும்பும் இனிய வாசகத்தையும் கண்டுங் கேட்டும் பெருமகிழ்ச்சி யடைந்த எமக்கு, இம்முனிபுங்கவரைப்பற்றி ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் வாரணசியில், சுவாமியவர்களின் அறுபதாவது ஆண்டு நிறைவு விழாவின் போது, வித்துவான் ஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் அவர்கள் தருமபுர ஆதீனத்தின் சார்பில் நிகழ்த்திய பேருரையில் ஓர் பகுதி எமது நினைவிற்கு வந்தது. அப்பகுதி வருமாறு:

''மேலும் நடையருப் பெருந்துறவுக் கோலத்தாலும், சீலத் தாலும், ஒல்லும் வகையெல்லாம் அறச்செயல் புரியுந்திறத் தாலும், சிவஞானம் பரப்பும் சிறப்பாலும் சைவசித்தாந்தம் பரப்பும் சால்பாலும், இவர்கள் குமரகுருபரர் எனவே திகழ் கின்ருர்கள்''

ஸ்ரீலஸ்ரீ கரசிவாசி சுவாமிகள் செய்துவரும் அறப்பணிகளுக் கும் கல்விப்பணிகளுக்கும், சிவதொண்டுகளுக்கும் இளவரசு ஸ்ரீ முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகளும், ஸ்ரீவைகுண்டம் டி. எம். குமரகுருபரன் பிள்ளையவர்களும், அருந்துணையாகவிருந்து பணிசெய்துவருகின்ருர்கள்.

தமிழ்ச் சைவ மக்களின் உள்ளத்தில் என்றும் அழியாத இடம்பெற்று குமரகுருபர சுவாமிகளின் திருவடிகளை, வாயார வாழ்த்தி, மனமாரச் சிந்தித்து, அவர் காட்டிய சிவநெறியில் ஒழுகுவதே நாம் அவருக்குச் செய்யும் அஞ்சலியாகும்.

தாயுமானவரின் – பராபரக்கண்ணிகள்

Couplets in venerable adoration of the Omnipotent and Omnipresent

sung by

St. THAYUMANAVAR

23

Those who have an ardent devotion to God will never cease to think about Him and His Supremacy. They will always speak about His grace and greatness. When they are so immersed in meditating Him, hymns in praise will overflow from their loving heart. They will dance before Him in ecstacy. They will admire His glory and go on pilgrimage to all the temples to have His Dharsan. Such acts of love are described as the only acts of His devotees in the following song.

ஆடுவதும் பாடுவதும் ஆனந்தமாக நின்னைத்
தேடுவதும் நின்னடியார் செய்கை பராபரமே.

(பொ – உரை) தன்னை மறந்து ஆடுதலும் அன்பினால் உருகிப் பாடுதலும் தலங்கள் தோறும் நின்னைத் தேடிச் சேறலும் உனது அடியார்களின் செய்கை.

O....Lord Supreme! To sing in joy, dance in ecstacy and to rejoice in worshipping you in all your abodes on the earth are the acts of your loving devotees.

———

(தொடரும்)

Translated by Sri. K. PALANISAMY, M.A., Lecturer in Tamil, Sri. K. G. S. Arts College, Arulnandi Nagar.

முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ்

உ ரை ந டை

பாலகவி வயிநாகரம்,

திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,

தேவகோட்டை.

(மலர் 16. இதழ் 7-ன் தொடர்ச்சி)

செம்பொன டிச்சிறு கிண்கிணி யோடு
சிலம்பு கலந்தாடத்
திருவரை யரைஞா ணரைமணி யொடுமொளி
திகழரை வடமாடப்
பைம்பொ னசும்பிய தொந்தியொ டுஞ்சிறு
பண்டி சரிந்தாடப்
பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச்
சுட்டி பதிந்தாடக்
கம்பி விதம்பொதி குண்டல முங்குழை
காது மசைந்தாடக்
கட்டிய சூழியு முச்சியு முச்சிக்
கதிர்முத் தொடுமாட
அம்பவ ழத்திரு மேனியு மாடிட
ஆடுக செங்கீரை
ஆதி வயித்திய நாத புரிக்குகன்
ஆடுக செங்கீரை (17)

சிவந்த பொன் போன்ற திருவடிகளிற் சிறிய கிண்கிணி யுடன் சிலம்பு கலந்து ஆடவும், அழகிய இடையில் அரை ஞாணுடன் உடைமணியும் ஒளி விளங்குகின்ற அரைவடமும்

ஆடவும், பசுமையான பொன்போலப் பொலிகின்ற தொந்தியோடு சிறிய வயிறு சரிந்தாடவும், பட்டமணிந்த நுதலில் விளங்குகின்ற பொட்டுடன் வட்டமான சுட்டி பதிந்து ஆடவும் அசைதல் பொருந்திய குண்டலங்களும் குழையணிந்த காதுகளும் துளங்கி ஆடவும், கட்டப்பெற்ற சூழியக் கொண்டையும் உச்சிக்கொண்டையும் ஒளியையுடைய முத்தாபரணத்துடன் ஆடவும், அழகிய பவழம் போன்ற திருமேனியும் இவற்றுடன் சேர்ந்து ஆடவும் செங்கீரை ஆடி அருளுவாயாக! ஆதி வயித்தியநாத புரியுள் எழுந்தருளியுள்ள குகப் பெருமானே! செங்கீரை ஆடி அருளுவாயாக!

குழையொடு குழையெதிர் மோதிக் காதணி
குண்டலம் வெயில்வீசக்
குமுத விதழ்க்கனி வாயமு தூறிய
குறுநகை நிலவூர
முழுவயி ரப்புய வலயமு முன்கை
முதாரியு மொளிகால
முத்த மரும்பி யெனக்குறு வேர்வு
முகத்தி லரும்பியிடப்
புழுதி யளைந்த பசுந்திரு மேனிப்
பொங்கொளி பொங்கியெழப்
புண்டரி கங்கண் மலர்ந்த விழிக்கடை
பொழியருள் கரைபுரள
அழகு கனிந்து முதிர்ந்த விளங்கனி
ஆடுக செங்கீரை
ஆதி வயித்திய நாத புரிக்குகன்
ஆடுக செங்கீரை. 18

குழையோடு குழை எதிர் மோதிக் காதிலே அணிந்திருக்கின்ற குண்டலங்கள் வெயிலை வீசவும், குவளைப் பூவை யொத்த இதழ்களையுடைய கனிவாயில் அமுதம் ஊறிய சிறிய பற்கள் நிலவை வீசவும், முழுதும் வைரம் பதித்த வாகுவலையமும்

முன் கைக் கங்கணமும் ஒளியை வீசவும், முத்துக்கள் அரும்பியதைப் போன்று சிறியவேர்வைத் துளிகள் முகத்திலரும்பவும், புழுதியில் அளைந்த பசிய திருமேனியிலிருந்து வெளிப்படுகின்ற ஒளி புறத்தே பொங்கி எழவும், தாமரை மலர்கள் மலர்ந்ததை ஒத்த விழிகளின் கடைகள் பொழிகின்ற கருணை கரை புரளவும், அழகு மிகுந்து முற்றிய இளங்கனியை ஒத்தவனே! செங்கீரை ஆடி அருளுவாயாக! ஆதி வயித்திய நாத புரிக்குள் எழுந்தருளிய குகனே! செங்கீரை ஆடி அருளுவாயாக!

(தொடரும்)

உ

திருச்செந்திலாண்டவன் துணை

திருவாசக அநுபூதி உரை*

(சீகாழித் தாண்டவராயர் அவர்கள் இயற்றியது)

திருச்சிற்றம்பலம்

திருச்சதகம் — எட்டாம் கொத்து

இனி எட்டாங்கொத்து, பெற்றோர் பயன்போலப் பெறக் கிடைத்ததில்லை யெனப்பேரின்பவ வாக்குக்கொடுக்கும் சிவசத்தி யனுபூதி. இனி, திருவடி கண்டிறந்தும், பிறவாது பிறந்தாலும், பேரின்பம் பெறுந் தன்மையைக் கூறும் திருவருள் விநியோக மாவன :—

வேண்டு நின்க மூற்க ணம்பு பொய்மை தீர்த்து மெய்ம்மையே
ஆண்டு கொண்டு நாயி னேனை யாவ வென்ற ருளுநீ
பூண்டுகொண் டடிய னேனும் போற்றி போற்றி யென்று மென்று
மாண்டு மாண்டு வந்து வந்து மன்ன நின்வ ணங்கவே.

(இ-ள்). அடியேன் வேண்டுவது திருவடிக்கன்பு தவிர வேறு பொருளில்லை; கருணை செய்து என் மலபோதப் பொய்யைக் கெடுத்து அருளின்பமாக, நாயான என்னை, அருளாக்கித் திருவடியில் சேர்த்த நாதனே! அடிமை எக்காலமும் ஆனதால் இரட்சிக்க! இரட்சிக்க! இதன்றியும் இச்சகத்தில் பிறப்பிறப்புளனாய் வந்தாலும், இறவாத பேரின்பம் பெறும் அடிமைப் பணி செய்ய அருள வேண்டும் என அருளியதைக் காண்க.

---

* இவ்வரிய நூலைப் பதிப்பித்த சென்னை–திருவான்மியூர். மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் நூல் நிலையத்தாரின் அனுமதி பெற்று இது வெளியிடப் பெறுகின்றது. இதன் விலை ரூ. 13/- ஷை நூல் நிலையத்தில் கிடைக்கும். 20% கழிவு உண்டு.

உ

சிவ சிவ

தில்லை வாழந்தணர் படிக்காசு நிதி சேமவைப்பு ரூபா. 7000/-

தென்தமிழ்ப் பயனுவுள்ள திருத்தொண்டத் தொகையில் 'தில்லைவாழந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்' என்று சுந்தர மூர்த்தி சுவாமிகளால் பாடப்பெற்ற பெருமையுடையவர்களும்,

'நீற்றினால் நிறைந்த கோல நிருத்தனுக்குரிய தொண்டாம் பேற்றினர்',

'அங்கணர் கோயில் உள்ளா அகம்படித் தொண்டு செய்வார்'

'அருமறை நான்கிேனாடு ஆறங்கமும் பயின்று வல்லார்'

'திருநடம் புரிவார்க்கு ஆளாம் திருவினாற் சிறந்த சீரார்'

'உறுவது நீற்றில் செல்வம் எனக் கொளும் உள்ளம் மிக்கார்'

'பெறுவது சிவன்பால் அன்பாம் பேறெனப் பெருகி வாழ்வார்'

'தானமும் தவமும் வல்லார்,'

'ஞானமே முதலா நான்கும் நவையறத் தெரிந்து மிக்கார்',

'செம்மையால் தணிந்த சிந்தைத் தெய்வ வேதியர்கள் ஆரூர் மும்மை ஆயிரவர்'

என்று சேக்கிழார் சுவாமிகளால் திருத்தொண்டர் புராணத்துப் புகழ்ந்தோதப் பெற்றவர்களும்,

'சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றி'

வாழ்பவர்களுமான தில்லை வாழந்தணர்களில், சித்சபையில் ஸ்ரீமந் நடராஜ மூர்த்திக்கு நித்தியப்படி பூசை முறைபார்க்கும் தில்லைவாழ்ந்தணர் ஒருவருக்குப் படிக்காசுஅளித்தற் பொருட் டுத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இத்தருமம் நிறுவப் பெற்றது. இது தில்லைவாழந்தணர் படிக்காசு நிதி' எனப் பெயர் பெறும்.

2. இதற்குரிய சேமவைப்பு ரூ. 7000/- ரூபா ஏழாயிரம். இத்தொகை கும்பகோணம் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா - இல் ஆண்டுதோறும் 7% வட்டி தரக்கூடிய நிலையான முதலீடு ஆக முதலீடு செய்யப்பெற்றுள்ளது. (பிக்சட் டிபாசிட் நெ. ஏ. 427224 - ரூ. 7000-5 வருஷம் - தேதி 28-6-65)இது நம்மாலும் நமக்குப் பின் உரிமையுள்ளவர்களாலும் பரிபாலனம் செய்யப் பெற்று வரும்.

3. இம்முதற் பொருளினின்று ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டி வருமானத்தில் இத்தருமத்தை நடத்துவதற்குரிய நிர்வாகச் செலவுகள் வகையரு போக எஞ்சிய தொகையில் நாடோறும் ரூபா ஒன்று வீதம் சிதம்பரத்தில் சித்சபையில் ஸ்ரீ நடராஜ மூர்த்திக்கு நித்தியப்படி பூசை முறை பார்க்கும் தில்லைவாழந்தணர் ஒருவர்க்குப் படிக்காசு அளிக்கப்பெறும். எஞ்சிய தொகை நம் யுக்தம்போல் தில்லைவாழந்தணர்களுக்கு இனும் அளிக்கப் பயன்படுத்தப்பெறும்.

4. இவ்வட்டி வருமானம் வேறு எந்த முறையிலும் பயன் படுத்தப் பெறமாட்டாது.

5. இம்முதற் பொருள் திருப்பி அளிக்கப்பெற்றதும், அதிக வட்டிவரக்கூடிய அரசியல் கடன்தாள்களில் முதலீடு செய்யப்பெறும். இம்முதற் பொருள் நம்பேரிலும் நமக்குப் பின் உரிமையுள்ளவர்கள் பேரிலும் இருந்துவரும்.

............தில்லைச் சிற்றம்பலம் மேய
செல்வன் கழல்ஏத்தும் செல்வம் செல்வமே.

திருப்பனந்தாள்,
28—6—1965. } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran*

Registered at Tiruvidamarudur Sub Registrar's Office on 30-6-65 as No. 30 of 1965 of Book No. 4. Volume 53 pages 5 to 8.

கலைக்கோயிலில் வரப்பெற்றுக்கொண்ட புத்தகங்களின் விபரம். (தொடர்ச்சி)

தொடர் எண்	புத்தகத்தின் பெயர்	ஆசிரியரின் பெயர்
10542	பாவைபாக்கள்	சென்னை சமரச சுத்தசன்மார்க்க சங்கம்
10543	மஹான் ஸ்ரீ குமரகுரு அந்தாதி திருத்தசாங்கம்	சுவாமி குமரானந்த சரஸ்வதி.
10544	ஸ்ரீ பிரம்மபுரம் ஸ்ரீகாழிவிநாயக சுவாமியின் ஆலயமும், கோமாளாம் பிகா என்ற காளிதேவியின் ஆலயமும் ஜீர்ணோத்தாரண சம்புரோஷண நிறைவு நினைவு மலர்	S. வேங்கட்டராம சாஸ்திரிகள்.
10545	கோளறு திருப்பதிகம்	ராம. அரு ராம எஸ்டேட் தருமங்கள் தேவகோட்டை.
10546	திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் சரித்திர சுருக்கமும், உள்ளுரைப் பொருளும்	சிவத்திரு. ஈசான சிவாச்சாரியார்
10547	திருநீற்றின் பெருமை	
10548	காழி வள்ளல் கருணை வாழ்த்து திருமணநல்லூர் திருஞானசம்பந்தர் பாமாலை	
10549	சிவானந்தர் செப்புவது	தெய்வீக வாழ்க்கைச் சங்கம், ராயபுரம்.
10550	தேவாரத்தல வணக்கம்	சிவநேசர் திருக்கூட்டம், கரைக்குடி.
10551 & 52	கோளறு திருப்பதிகம்	

10553 to 57 திருவாப்பாடி மகாகும்பாபிஷேகம்	
10558 குங்கிலியக் கலயநாயனுர் அன்பின் திறம்.	தருமபுர ஆதீனம்.
10559 to 61 திருநாவுக்கரசர் அருளிய திருஎறும்பியூர்த் தேவாரம்	திருசிரபுரம் மௌன குருவார வழி பாட்டுக் கழகத்தார்.
10562 திருஅதிகைத் தேவாரத் திருப்பதிகங்கள் (முதல் ஏழு திருமுறை)	ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.
10563 திருப்பைஞ்ஞீலித் தலவரலாறும் தேவாரமும்	திருசிரபுரம் மௌனகுரு வாரவழிபாட்டு கழகத்தார்.
10564 திருஞானசம்பந்தர் அருளிய திருமயிலை தேவாரம் உரையுடன்	குகஸ்ரீ ரசபதி அவர்கள்.
10565 & 66 திருமுறைத் திரட்டு	நல்வழிக்கழகம், அரிமழம்.
10567 to 74 திருப்பாற்றுறைத் தல வரலாறும் தேவாரமும்	மௌன குரு வாரவழி பாட்டுக் கழகம்.
10575 கதிர்காமம்	இராம கிருஷ்ண மடம், கொழும்பு-6.
10576 அமைதி	ச. தண்டபாணி தேசிகர்.
10577 & 78 கந்தர்கலி வெண்பா	ஆர் ஜி. பதி கம்பெனி.
10579 கோவிலுக்குப் போக வேண்டுமா?	அருள் நெறித் திருக்கூட்டம்,குன்றக்குடி.
10580 ஸ்ரீ சண்முக கவசம் (மூலமந்திரத்துடன்)	த. ச. மீனுட்சி சுந்தரம் பிள்ளை.
10581 வாரவழிபாட்டுத் தோத்திர சாத்திரங்கள்	காஞ்சிபுரம் மெய்கண்டார் கழகம்.

(தொடரும்)

'திருமுறை வெளியீடுகள்'

		ரூ. பை
1	விநாயகர் திருமுறை (அச்சில்) ...	
2	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் (புதிய பதிப்பு) ...	3 50
3	சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம் ...	3 00
4*	திருஞானசம்பந்தர் தேவாரம் (மூலம் மட்டும் புதிய பதிப்பு) ...	2 75
5*	திருநாவுக்கரசர் தேவாரம் ,, ...	2 00
6*	சுந்தரர் தேவாரம் ,, ...	1 30
7*	திருவாசகம் ,, ...	0 56
8*	திருக்கோவையார்-பேராசிரியர் உரையும் பழைய உரையும் (புதிய பதிப்பு) ...	2 90
9	ஒன்பதாம் திருமுறை-திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் தெளிவுரை ...	1 50
10	,, ,, மூலம் மட்டும் ...	0 56
11	திருமந்திரம் (புதிய பதிப்பு) ...	2 25
12	பதினோருந்திருமுறை (புதிய பதிப்பு) ,, ...	1 50
13	பெரியபுராணம் (மூலம்மட்டும்) ...	3 00
14	பெரியபுராணம் உரை நடை ...	2 00
15	திருத்தொண்டர் புராண சாரம் ...	0 40
16	அகத்தியர் தேவாரத் திரட்டு (அச்சில்)	
17	திருவிளையாடற் புராணம் மூலம் மட்டும் ...	3 00
18	திருவிளையாடற் புராணம் உரை நடை ...	2 25
19	கந்தபுராணச் சுருக்கம் (மூலம் மட்டும்) ...	1 75
20	கந்த புராணம் – முதல் மூன்று காண்டங்கள் மூலம் மட்டும் ...	2 75
21	,, யுத்த தேவ காண்டம் ,, ...	2 00
22	,, தக்ஷகாண்டம் ,, ...	1 50
23	கந்தபுராண உரைநடை ,, ...	3 00
24	திருக்குறள்-அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும் ஹிந்தி மொழி பெயர்ப்பும் ...	1 50
25	திருக்குறள்-பொருட்பால் ,, ...	2 50
26	திருக்குறள் – காமத்துப்பால் ,,	
	ஷெ 24, 25, 26. திருக்குறள் 3 புத்தகமும் ...	4 00
27	திருக்குறள் மூலமும் குறிப்புரையும் ...	0 75
28	தாயுமான சுவாமிகள் பாடல் குறிப்புரை ...	1 25
29	அம்மையார் அற்புதத் திருவந்தாதி (புதிய பதிப்பு) ...	0 25
30	திருக்கைலாய ஞானவுலா– உரையுடன் ...	0 50
31	கந்தர் அலங்காரம் குறிப்புரையுடன் ...	0 25
32	கந்தரனுபூதி மூலம் ...	0 13
33	கந்தரனுபூதி தெளிவுரை ...	0 35
34	கந்தர்கலி வெண்பா - ஆங்கிலம் ஹிந்தி மொழிபெயர்ப்புகளுடன் ...	0 37
35	கந்தர்கலி வெண்பா மூலம் மட்டும் ...	0 10
36	கந்தர்கலி வெண்பா மூலமும் உரையும் ...	0 37
37	நீதிநெறி விளக்கம் - ஆங்கிலமும் ஹிந்தியும் ...	0 50
38	சகலகலாவல்லிமாலை ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது ...	0 60

Registered With the Registrar of Newspapers for India
Under No. R. No. 1485/57.
Reged No. M. 5574 குமரகுருபரன்

39	முதுமொழி மேல் வைப்பு (குறிப்புரையுடன்)	...	0 75
40	திருவுசாத்தானக் கல்லெழுத்துக்கள்	...	0 37
41	திருக்குறள்-பொருட்பால்-பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம்	...	0 13
42	திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா-மதுரை மீனாட்சி யம்மை பிள்ளைத்தமிழ்-மதுரைக் கலம்பகம்-நீதிநெறி விளக்கம்-மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணி மாலை-மதுரை மீனாட்சியம்மை குறம்	...	2 75
43	திருவாரூர் நான்மணிமாலை-முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்		1 25
44	சிதம்பர மும்மணிக்கோவை-சிதம்பரச் செய்யுட்கோவை தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை	...	1 00
45	பண்டார மும்மணிக் கோவை-காசிக்கலம்பகம் சகலகலாவல்லி மாலை	...	1 00
46	சிதம்பரச் செய்யுட்கோவை	...	0 75
47	முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்	...	0 50
48	குமரகுருபர சுவாமிகள் ஜீவிய சரித்திரப்பட விளக்கங்களும்	...	0 25
49	திருக்கயிலைத் திருமுறை	...	0 37
50	திருக்கடவூர்த் திருமுறையும் பிரபந்தங்களும்	...	0 19
51	செந்திலாண்டவன் மகிமை	...	0 13
52	திருக்குறள்-உரைக்கொத்து-அறத்துப்பால் 3-ம் பதிப்பு	...	1 37
53	ஷை ஷை பொருட்பால் 2-ம் பதிப்பு	...	2 75
54	ஷை ஷை காமத்துப்பால் ஷை	...	1 20
55	அபிராமி அந்தாதி-தெளிவுரையுடன்	...	0 50
56	மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் (குறிப்புரையுடன்)	...	0 50
57	திருவாரூர்-திருப்பனுவல்கள்	...	0 10
58	திருவெம்பாவை-திருப்பள்ளியெழுச்சி	...	0 10
59	பழமொழித்திருமுறை	...	0 25
60	திருவாரூர் நான்மணிமாலை	...	0 50
61	Hymns and Proverbs	...	0 30
62	அப்பர்விழா வெளியீடு	...	0 25
63	நவக்கிரகமாண்பு	...	0 25
64	குமரகுருபரர் வரலாறும், அற்புதத்தேவாரத் திரட்டும்	...	0 30

மேலே கண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்.
2. ஸ்ரீ K. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்.

"தியாகராஜ விலாசம்" 53. பிள்ளையார் கோயில்தெரு,
திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை-5

குறிப்பு:- • இக்குறியிடப் பெற்றவற்றின் விற்பனைத் தொகை ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற பன்னிரு திருமுறை பதிப்பு நிதியைச்சாரும். மற்ற நூல்களில் திருக்குறள் உரைக்கொத்து (எண் 52, 53, 54) தவிர்த்து எஞ்சியவற்றின் விற்பனைத்தொகை 'குமரகுருபரன்' பத்திரிகையைச்சாரும்.

அச்சிட்டது:- குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம்-65.